ஒல்கா : ஆமாம்.

ழெசிகா : யாரும் சாகவில்லை. அடுத்த முறை உங்களுக்கு அதிர்ஷ்டம் கிட்டலாம். இங்கு எப்படி வந்தீர்கள்?

ஒல்கா : கதவு வழியாகத்தான். நீங்கள் வெளியே சென்றபோது இதைத் திறந்துவைத்துவிட்டுப் போய்விட்டீர்கள். கதவுகளை ஒருகாலும் திறந்துவைக்கவே கூடாது.

ழெசிகா : (உய்கோவைக் காட்டி) இவரும் அலுவலக அறைக்குள் தான் இருந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா?

ஒல்கா : தெரிந்தபோதிலும் துணிய வேண்டிய நிலை.

ழெசிகா : கொஞ்சம் பிசகியிருந்தால் நீங்கள் இவரைக் கொன்றிருக்கக் கூடும்!

ஒல்கா : அப்படி நடந்திருந்தால் அதுவும் இவருக்கு நல்லதாகத்தான் இருந்திருக்கும்.

ழெசிகா : நிஜமாகவா?

ஒல்கா : எங்கள் கட்சிக்குத் துரோகிகளை அவ்வளவாகப் பிடிக்காது.

ழெசிகா : உய்கோ துரோகி இல்லை.

ஒல்கா : இதை நான் நம்புகிறேன். ஆனால் மற்றவர்களை நம்பும்படி வற்புறுத்த என்னால் இயலாது. (சற்றுப் பொறுத்து) இந்த விவகாரம் நீண்டுகொண்டே வருகிறது. எட்டுத் தினங்களுக்கு முன்பே இது முடிந்திருக்க வேண்டும்.

ழெசிகா : தகுந்த சந்தர்ப்பம் வரவேண்டாமா?

ஒல்கா : நாம்தான் சந்தர்ப்பங்களை உண்டாக்க வேண்டும்.

ழெசிகா : உங்களைக் கட்சிதான் இங்கு அனுப்பியதா?

ஒல்கா : நான் இங்கு இருக்கிறேன் என்று கட்சிக்குத் தெரியாது. நானாகவே வந்துவிட்டேன்.

ழெசிகா : எனக்குப் புரிகிறது. கைப்பையில் ஒரு குண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு வந்து அதை உய்கோவின் மேல் வீசி அவர் பெயருக்கு களங்கம் ஏற்படாமல் காப்பாற்ற வந்திருக்கிறீர்கள்.



ஒல்கா : என் முயற்சி மட்டும் வெற்றி பெற்றிருந்தால், உய்கோ எதரரையும் தீர்த்துக்கட்டித் தன்னையும் மாய்த்துக் கொண்டார் என்று எல்லோரும் நம்பியிருப்பார்கள்.

ழெசிகா : ஆனால் இவரும் இறந்துபோயிருப்பாரே!

ஒல்கா : எப்படியிருந்தாலும் இனி இவர் தப்பித்துக்கொள்ள அதிக வாய்ப்புகள் இல்லை.

ழெசிகா : உங்கள் நட்பு மிகவும் ஆழமானதாகத்தான் இருக்கிறது!

ஒல்கா : நிச்சயம் உங்கள் காதலைவிட ஆழமானதுதான். (ஒருவரை ஒருவர் உற்று நோக்குகிறார்கள்) பணியைச் செய்யவிடாமல் இவரைத் தடுத்தது நீங்கள்தானா?

ழெசிகா : நான் எதையும் தடுக்கவில்லை.

ஒல்கா : ஆனால் நீங்கள் அவருக்கு உதவியும் செய்யவில்லையே!

ழெசிகா : எதற்காக நான் உதவவேண்டும்? கட்சியில் சேருவதற்கு முன் அவர் என்னைக் கேட்டுக்கொண்டு சேர்ந்தாரா? அல்லது, முன்பின் தெரியாத ஒருவரைப் போய்க் கொலைசெய்வதைத் தவிர வேறு ஒன்றும் தன் வாழ்வில் சாதிப்பதற்கு இல்லை என்று முடிவு செய்தபோதாவது என் யோசனையைக் கேட்டாரா?

ஒல்கா : இவராகத் தேர்ந்தெடுத்து எங்கள் கட்சியில் வந்து சேர்ந்தார்; இந்தப் பணி வேண்டும் என்று இவராகக் கேட்டுப் பெற்றார். இதுமட்டில் உங்களுக்குப் போதுமானது.

ழெசிகா : இல்லை, எனக்கு இது போதாது.

(உய்கோவின் முனகல்)

ஒல்கா : இவர் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார். இவர் குடித்ததை நீங்கள் அனுமதித்திருக்கக் கூடாது.

ழெசிகா : இவர்நிலை இதைவிட இன்னும் படுமோசமாக இருந்திருக்கும் நீங்கள் வெடித்த குண்டின் சிதறல்கள் இவர் முகத்தில் பட்டிருந்தால். (சற்றுப் பொறுத்து) இவர் உங்களை மணந்து கொண்டிருக்க வேண்டும்! இல்லையே என்பதுதான் என்



வருத்தம். உங்களைப் போன்ற ஓர் அறிவுஜீவி மனைவிதான் இவருக்குத் தேவை. இவர்பாட்டுக்கு வீட்டில் அறைக்குள்ளே இருந்து கொண்டு உங்கள் ஆடைகளை எல்லாம் அழகாக இஸ்திரிபோட்டு மடித்து வைத்துக் கொண்டிருந்திருப்பார். நீங்கள்பாட்டுக்கு ஊரில் நாலாபக்கமும் போய்க் குண்டுகளை வீசிக்கொண்டிருந்திருப்பீர்கள். நாம் எல்லோருமே மகிழ்ச்சியாக இருந்திருப்போம். (சிறு மௌனத்துக்குப் பின்) நீங்கள் இவரைக் காதலிக்கிறீர்கள், இல்லையா?

ஒல்கா : காதல் இங்கே எங்கிருந்து வந்தது? நீங்கள் அதிகமாக நாவல் படிப்பீர்கள்... என்று நினைக்கிறேன்.

ழெசிகா : ஆமாம். அரசியலில் ஈடுபடாதவர்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டாமா?

ஒல்கா : நீங்கள் கவலைப்படாதீர்கள். அறிவுஜீவிகளை காதல் ஒரு தொந்தரவும் செய்வதில்லை. எங்களுக்கு அதுவல்ல வாழ்க்கை. வீணடிக்க எனக்கு நேரமில்லை. (சிறு மௌனம்) இவரை எழுப்புங்கள். நான் இவரிடம் பேச வேண்டும்.

ழெசிகா : (கட்டிலை நெருங்கி உய்கோவை உசுப்புகிறாள்) உய்கோ, உய்கோ, உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்.

உய்கோ : ம்... (நிமிர்ந்து கொள்கிறான்) ஒல்கா... ஒல்கா... வந்து விட்டாயா! நீ இங்கு வந்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி. நீதான் எனக்கு உதவ வேண்டும்! (கட்டில் விளிம்பில் எழுந்து அமர்கிறான்) ஐயோ... கடவுளே! தலையை என்னமாய் வலிக்கிறது! நாம் எங்கே இருக்கிறோம்? நீ வந்தது பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சி. உனக்குத் தெரியுமா?... கொஞ்சம் இரு, ஏதோ நடந்ததே!... ஒரு பெரிய இடைஞ்சலான சம்பவம்... குண்டை நீதான் வீசினாய் இல்லையா?

ஒல்கா : ஆமாம்.

உய்கோ : என்னை ஏன் நம்பவில்லை?



ஒல்கா : உய்கோ, இன்னும் பதினைந்து நிமிடங்களில் ஒரு தோழர் சுவர் தாண்டி ஒரு கயிற்றை வீசுவார். நான் அதன் வழியே வெளியேற வேண்டும். எனக்கு மிகவும் அவசரம். நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்.

உய்கோ : ஏன் என்மீது நம்பிக்கையில்லை?

ஒல்கா : ழெசிகா, அந்த டம்ளரையும் தண்ணீர்க் கூஜாவையும் இப்படிக் கொடுங்கள்.

(ழெசிகா அவற்றைத் தருகிறாள். டம்ளரில் நீரை நிரப்பி அதை உய்கோ முகத்தில் அடிக்கிறாள் ஒல்கா)

உய்கோ : உய்...

ஒல்கா : இப்போது நான் சொல்வதைக் கேள்.

உய்கோ : சரி (முகத்தைத் துடைத்துக்கொள்கிறான்) நம் தோழர்கள் என்ன நினைக்கிறார்கள்?

ஒல்கா : நீ ஒரு துரோகி என்று நினைக்கிறார்கள்.

உய்கோ : ரொம்பவும் கடுமைதான்!

ஒல்கா : இன்னும் ஒருநாள்கூடத் தாமதிக்க முடியாது. விஷயம் நாளை மாலைக்குள் முடிந்தாக வேண்டும்.

உய்கோ : நீ குண்டு வீசியிருக்கக் கூடாது.

ஒல்கா : உய்கோ, ஒரு கஷ்டமான பணியை நீயே ஏற்றுக் கொண்டாய்; தனியாகவே செய்து முடிப்பதாகவும் சொன்னாய். உன்மேல் முதலில் நம்பிக்கை வைத்தது நான்தான். மற்றவர்களுக்கு அந்த நம்பிக்கையை ஊட்டியதும் நான்தான். ஆனால் நீ தீரச் செயல்களைச் செய்துகாட்டுவதற்கு வாய்ப்பு அளிப்பதற்காக ஏற்பட்டதன்று கட்சி. செய்ய வேண்டிய பணி ஒன்று இருக்கிறது. அது செய்து முடிக்கப்பட வேண்டும். யாரால் என்பது முக்கியமில்லை. ஏற்றுக் கொண்ட வேலையை இன்னும் இருபத்துநாலு மணிநேரத்துக்குள் நீ செய்து முடிக்க வில்லையென்றால், உனக்குப் பதிலாக அதைச் செய்வதற்கு வேறு ஒருவர் அனுப்பப்படுவார்.

உய்கோ : எனக்குப்பதில் வேறு ஒருவர் நியமிக்கப்பட்டால், நான் கட்சியிலிருந்து விலகிவிடுவேன்.

ஒல்கா : நீ என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? கட்சியிலிருந்து வெளியேறிவிட முடியும் என்று நினைக்கிறாயா? உய்கோ! இது போர்க்காலம். தோழர்கள் ஒன்றும் விளையாடிக் கொண்டிருக்கவில்லை. கட்சியிலிருந்து பிணமாகத்தான் வெளியேற முடியும்.

உய்கோ : சாவுக்குப் பயந்தவனில்லை நான்.

ஒல்கா : சாவது ஒன்றும் பெரிதில்லைதான், ஆனால் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டு, முட்டாள்பட்டத்துடன் ஒரு முந்திரிக் கொட்டையைப்போல், தத்துப்பித்தென்று ஒன்று கிடக்க ஒன்று செய்து தொலைக்குமே என்ற பயத்தில் தீர்த்துக் கட்டப்படும் ஒரு முழு அசடைப்போல் சாகப் போகிறாயா? இதைத்தான் நீ விரும்புகிறாயா? என் வீடு தேடி முதல்முறை நீ வந்தபோது இதைத்தான் வேண்டும் என்று கேட்டு வந்தாயா? அப்போது என்னவோ மிகுந்த சுயகர்வத்துடனும் கம்பீரத்துடனும் இருந்தாயே!

உய்கோ : நீ அந்தக் குண்டை வீசியிருக்கக் கூடாது?

ஒல்கா : உன் முடிவுதான் என்ன?

உய்கோ : அது உனக்கு நாளை தெரியும்.

ஒல்கா : அப்போது சரி. போகிறேன், உய்கோ!

உய்கோ : போ, ஒல்கா!

ழெசிகா : மீண்டும் சந்திப்போம், மேடம்!

ஒல்கா : விளக்கை அணைத்துவிடுங்கள். நான் வெளியேறுவது யார் கண்ணிலும் படக்கூடாது.

(ழெசிகா விளக்கை அணைக்கிறாள் – ஒல்கா கதவைத் திறந்து கொண்டு வெளியேறுகிறாள்)



## காட்சி – 2

உய்கோ, ழெசிகா

ழெசிகா : விளக்கைப் போடவா?

உய்கோ : கொஞ்சம் பொறு. அவள் திரும்பிவர வேண்டியிருந்தாலும் இருக்கலாம். (இருளில் காத்திருக்கின்றனர்.)

ழெசிகா : ஜன்னலைச் சற்றே திறந்து இடுக்கு வழியே பார்க்கலாமா?

உய்கோ : வேண்டாம். (மௌனம்)

ழெசிகா : வலிக்கிறதா? (உய்கோ பதில் கூறவில்லை) இருட்டிலேயேதான் பதிலாவது சொல்லுங்களேன்.

உய்கோ : தலையை வலிக்கிறது. அவ்வளவுதான். (சிறுமௌனம்). எட்டேநாள் காத்திருக்க முடியாத நம்பிக்கை ஒரு நம்பிக்கையா?

ழெசிகா : இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

உய்கோ : யாருமே என்னை நம்பவில்லை என்றால், எப்படித்தான் வாழ்வது?

ழெசிகா : என்மேல் யாரும் எப்போதும் நம்பிக்கை வைத்ததேயில்லை. மற்றவர்கள் என்னை நம்பிய அளவுகூட நீங்கள் நம்பியதில்லை, ஆனாலும் நான் இல்லையா?

உய்கோ : அந்தக் கோஷ்டியிலே என்னை ஓரளவுக்காவது நம்பியவள் இவள் ஒருத்திதான்.

ழெசிகா : உய்கோ!

உய்கோ : இவள் ஒருத்திமட்டும்தான் என்பது தெரிந்ததுதானே! (சிறு மௌனம்) இந்நேரம் அவள் தப்பித்துப் போயிருக்க வேண்டும். விளக்கைப்போடலாம் என்று நினைக்கிறேன். (அவன் விளக்கைப் போடுகிறான். ழெசிகா சட்டெனத் திரும்பிக் கொள்கிறாள்) என்ன ஆயிற்று?

ழெசிகா : உங்களை வெளிச்சத்தில் பார்க்க எனக்குக் கூசுகிறது.

உய்கோ : விளக்கை அணைத்துவிடட்டுமா?

ழெசிகா : வேண்டாம். (அவனருகில் வருகிறாள்) நீங்கள் ஒரு



மனிதனைக் கொல்லப்போகிறீர்கள்.

உய்கோ : நான் என்ன செய்யப்போகிறேன் என்று எனக்கே தெரிய வில்லை.

ழெசிகா : துப்பாக்கியை இப்படிக் கொடுங்கள்.

உய்கோ : ஏன்?

ழெசிகா : அது எப்படிச் செய்யப்பட்டிருக்கிறதென்று பார்க்க வேண்டும்.

உய்கோ : இன்று பிற்பகல் முழுவதும் அது உன்னிடம்தானே இருந்தது.

ழெசிகா : அப்போது அது ஒரு சாதாரண விளையாட்டுப் பொருள்.

உய்கோ : (அதை எடுத்து அவளிடம் நீட்டுகிறான்) ஜாக்கிரதை!

ழெசிகா : ஆமாம். (அதைக் கவனித்துப் பார்க்கிறாள்) விந்தையாக இருக்கிறது.

உய்கோ : எது விந்தையாக இருக்கிறது?

ழெசிகா : இப்போது இதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் (சிறு மௌனம்) நீங்கள் ஒரு மனிதனைக் கொல்லப் போகிறீர்கள்.

(உய்கோ சிரிக்கிறான்)

ழெசிகா : ஏன் சிரிக்கிறீர்கள்?

உய்கோ : இப்போது நீ நம்புகிறாய் அல்லவா? நம்புவது என்ற முடிவுக்கு வந்துவிட்டாய்.

ழெசிகா : ஆமாம்.

உய்கோ : இப்போதாவது அந்த முடிவுக்கு வந்தாயே; நல்லது. ஏனென்றால் யாருக்குமே அந்த நம்பிக்கையில்லை. (மௌனம்) இதுவே எட்டுநாட்களுக்கு முன்பு இருந்திருந்தால், எனக்கு ஒருகால் உதவியிருந்திருக்கலாம்.

ழெசிகா : அது என் தவறு அல்ல. நான் எதைக் காண்கிறேனோ அதைத்தான் நம்புகிறேன். இன்று காலையில்கூட அவர் இறக்கப்போகிறார் என்பதை என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை. (சிறு மௌனம்) சற்று நேரத்துக்கு



முன் நான் உங்கள் அலுவலக அறைக்குள் நுழைந்தேன். ஓர் ஆசாமியின் முகத்திலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. மற்றவர்கள் எல்லோரும் இறந்தவர்களாகவே தோன்றியது. எதரர் இறந்து போனவர் என்று அவர் முகத்திலேயே தெரிந்தது. நீங்கள் அவரை கொல்லாவிட்டால் வேறு ஒருவர் அதற்காக அனுப்பப்படுவார்.

உய்கோ : இல்லை; நான்தான் அதைச் செய்யப்போகிறவன்!

ழெசிகா : (மெல்லக் குரலைத் தாழ்த்தி) போதும், வாயை மூடுங்கள்.

உய்கோ : அவள் ஒரு குண்டை எடுத்துச் சுவரில் வீசிவிட்டாள். இதில் பெருமைகொள்ள என்ன இருக்கிறது? எங்களைப் பார்க்கக் கூட இல்லை. யார் வேண்டுமானலும் கூடத்தான் கொலை செய்துவிடலாம், அவன் செய்வதை அவனே காண வேண்டும் என்ற கட்டாயம் இல்லாதபோது! நான் சுடுவதற்குத்தான் தயாராய் இருந்தேன். ஆபீஸ் அறைக்குள்ளே நான் அவர்களை நேருக்குநேர் பார்த்தபடி சுடப்போகிற சரியான சமயத்தில்தான் இவள் வந்து என் காரியத்தைக் கெடுத்து விட்டாள்.

ழெசிகா : நிச்சயமாகவே சுட்டுவிடும் நிலையில்தான் நீங்கள் இருந்தீர்களா?

உய்கோ : என் பைக்குள்ளே கை நுழைத்துவிட்டேன், விரலைக் கூட விசையின் மேல் வைத்தும்விட்டேன்.

ழெசிகா : சுடவேண்டியதுதான் பாக்கியாக்கும்! உங்களால் நிச்சயமாகச் சுட்டிருக்க முடியுமா?

உய்கோ : வந்து..... நான்..... நல்லவேளை ! அப்போது எனக்கு ஒரே கோபம். ஆதலால் சுட்டுவிடக்கூடிய நிலையில்தான் இருந்தேன்... இப்போது எல்லாவற்றையும் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டும்! (சிரிக்கிறான்) அவள் சொன்னதைக் கேட்டாய் அல்லவா? நான் ஒரு துரோகியாம்! அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு என்ன? அங்கு அறைக்குள் உட்கார்ந்துகொண்டு இன்னார் சாக வேண்டும் என்று

சுலபமாக முடிவு செய்துவிடுகிறார்கள், ஏதோ பெயர்ப் பட்டியலிலிருந்து வேண்டாத பெயரை அடித்துவிடுவது போல. அது சுலபம். அழகாகக் கச்சிதமாக செய்துவிடலாம். ஆனால் இங்கு கொலை என்பது ஒரு செயல். இது கொலைக்களம், ஆடுமாடுகளை அடித்துக் கொல்லும் கசாப்புக்கடையைப் போல. (சிறுமௌனம்) அவர் என் எதிரே நின்று புகைபிடிக்கிறார்; மது அருந்துகிறார்; கட்சியைப் பற்றிப் பேசுகிறார்; ஏதேதோ திட்டங்கள் தீட்டுகிறார். அவர் கண்களைப் பார்த்தாயா?

ழெசிகா : ம்… பார்த்தேன்.

உய்கோ : எப்படி ஆழமாகச் சலனமற்று ஒளியோடு பளிச்சிடுகின்றன, பார்த்தாயா?

ழெசிகா : ஆமாம்.

உய்கோ : நான் அவருடைய கண்களைத்தான் சுடப்போகிறேன். வயிற்றைக் குறிவைக்க வேண்டும். அப்போதுதான் நம் கைத்துப்பாக்கி எப்படியும் சிறிது மேல் நோக்கி நகர்ந்து சரியாக வரும்.

ழெசிகா : அவர் கண்கள் எனக்குப் பிடித்திருக்கிறது!

உய்கோ : (திடீரென்று) புலன்களுக்கு அப்பாற்பட்டது.

ழெசிகா : எது?

உய்கோ : ஒருகொலை என்பது புலன்களுக்கு அப்பாற்பட்டது என்கிறேன். துப்பாக்கிவிசையை அழுத்துகிறோம். அதன் பிறகு என்ன நடக்கிறது என்பது எதுவும் நமக்குப் புரிவதில்லை. (சிறு மௌனம்) தலையை வேறுபுறமாகத் திருப்பிக்கொண்டு சுட முடிந்தால்! (சிறு மௌனம்) இதையெல்லாம் உன்னிடம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்றுதான் தெரியவில்லை!

ழெசிகா : எனக்கும் அதுதான் தெரியவில்லை.

உய்கோ : கொல்வது, செத்துப்போவது ஆகிய இரண்டும் ஒன்றுதான்; இரண்டிலுமே தனிமைதான். அவன் நல்ல தைரியசாலி; ஒரே ஒருமுறைதான் சாகப்போகிறான்! ஆனால் நான், இதோ



பத்து நாள்களாக அவனை ஒவ்வொரு நிமிஷமும் கொன்று கொண்டிருக்கிறேன். (திடீரென்று) நீயாக இருந்தால் என்ன செய்வாய், ழெசிகா?

ழெசிகா : என்ன?

உய்கோ : இதோ பார். நாளைக்குள் நான் கொல்லாவிட்டால் ஒன்று நான் தலைமறைவாக ஓடிவிடவேண்டும் அல்லது அவர்களிடம் திரும்பிப்போய்ப் என்னை என்ன வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட வேண்டும். கொன்று விட்டால்… (முகத்தைத் தன் கைகளால் கொஞ்ச நேரம் மூடிக்கொள்கிறான்). நான் செய்ய வேண்டியது என்ன? நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

ழெசிகா : நானா? உங்கள் நிலையில் நான் இருந்தால் (சிறிது நேரத்துக்குப் பின்) நேராக எதரரிடம் சென்று விஷயத்தைச் சொல்லிவிடுவேன். 'ஐயா, உங்களைக் கொல்வதற்காக என்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள் ஆனால் நான் மனம் மாறிவிட்டேன். இனி உங்களோடு செயலாற்ற விரும்புகிறேன்' என்று சொல்லிவிடுவேன்.

உய்கோ : பாவம், ழெசிகா!

ழெசிகா : ஏன் இப்படிச் சொல்ல முடியாதா?

உய்கோ : இதற்குத் தான் துரோகச் செயல் என்று பெயர்.

ழெசிகா : (சோகமாக) பாருங்கள், நான் உங்களுக்கு ஒன்றுமே சொல்ல முடிவதில்லை. (சிறிது நேரத்துக்குப்பின்) நான் சொன்னதுபோல் சொல்லமுடியாது என்பதற்கு என்ன காரணம்? அவர் கருத்து வேறு, உங்கள் கருத்து வேறு என்பதாலா?

உய்கோ : அப்படியேதான் வைத்துக்கொள்ளேன். எனக்கும் அவருக்கும் வேறுபட்ட கருத்துக்கள்.

ழெசிகா : உங்கள் கருத்துக்கு வேறுபட்ட கருத்து உள்ளவர்களைக் கொன்றுவிட வேண்டுமா?



உய்கோ : சில சந்தர்ப்பங்களில் அப்படித்தான்.

ழெசிகா : ஆனால் நீங்கள் ஏன், லூயி ஒல்கா ஆகியோருடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டீர்கள்?

உய்கோ : அவைதாம் சரியானவை என்பதால்.

ழெசிகா : லூயியைச் சந்தித்தற்குப் பதிலாகச் சென்ற வருடம் எதரரை முதலில் சந்தித்தீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கு எதரரின் கருத்துக்கள்தாம் சரியானவை என்று தோன்றியிருக்கும் இல்லையா? ஆனால் ஒன்று, உய்கோ! எதரர் மிகவும் திடமானவர். அவர் வாயைத் திறந்தால் போதும். அவர் சொல்வதுதான் சரி என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. மேலும் அவரிடம் கபடமில்லை. கட்சியின் நலனைத்தான் விரும்புகிறார் என்று நான் நினைக்கிறேன்.

உய்கோ : அவர் என்ன விரும்புகிறார், என்ன நினைக்கிறார் என்பன பற்றியெல்லாம் எனக்கு அக்கறையில்லை. அவர் என்ன செய்கிறார் என்பதுதான் எனக்கு முக்கியம்.

ழெசிகா : ஆனால் வந்து…

உய்கோ : அவர் நோக்கம் குறிக்கோள் ஆகியவற்றை விலக்கிவிட்டு செயலை மட்டுமே தனித்துப் பிரித்துப் பார்த்தால், அவர் ஒரு சமூகத்துரோகி!

ழெசிகா : (புரியாத நிலையில்) செயலை மட்டும் தனித்துப் பிரித்துப் பார்த்தாலா?

உய்கோ : ஆமாம்.

ழெசிகா : ஓஹோ! (சிறிது நேரத்துக்குப்பின்) ஒருகால் நீங்கள் என்ன செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பது அவருக்குத் தெரிந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போது அவர் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்? சமூகத்துரோகி என்றுதானா?

உய்கோ : அதைப் பற்றி நமக்கென்ன? அநேகமாக நினைக்கலாம்.



ழெசிகா : அப்போது யார் நினைப்பது சரி?

உய்கோ : நான் நினைப்பதுதான்.

ழெசிகா : எப்படிக் கூறுகிறீர்கள்?

உய்கோ : அரசியலும் அறிவியல்தான். நீ செய்வது சரி, மற்றவர்கள் செய்வது தவறு என்று உன்னால் நிரூபித்துக் காட்ட முடியும்.

ழெசிகா : அப்படியென்றால் உங்களுக்கு ஏன் இந்தத் தயக்கம்?

உய்கோ : அதை உனக்கு விளக்கிச் சொல்வதென்றால், நீண்ட நேரம் பிடிக்கும்.

ழெசிகா : இரவு முழுவதும் இருக்கிறதே!

உய்கோ : போதாது; பல மாதங்கள், வருடங்கள் ஆகும்.

ழெசிகா : ஒகோ! (புத்தகங்கள் வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று) இதெல்லாம் இவற்றுள் எழுதியிருக்கிறது போலும்!

உய்கோ : ஒருவகையில் ஆம் என்றுதான் சொல்ல வேண்டும். சரியாகப் படிக்கத் தெரிந்தால் போதும்!

ழெசிகா : அட கடவுளே! (ஒரு புத்தகத்தை எடுத்துத் திறந்து, ஆர்வமிக்க வியப்புடன் பார்க்கிறாள். பின் மூடி வைக்கிறாள்) அட கடவுளே!

உய்கோ : இப்போது ஆளைவிடு. போய்த் தூங்கு; அல்லது வேறு என்ன வேண்டுமோ, செய்.

ழெசிகா : என்ன ஆயிற்று? நான் என்ன சொல்லிவிட்டேன்?

உய்கோ : ஒன்றுமில்லை. நீ ஒன்றும் சொல்லவில்லை. தவறு என்னுடையது. உன்னிடம் போய் உதவி கோரியது என் முட்டாள்தனம்! உன் யோசனைகள் வேறோர் உலகத்தைச் சார்ந்தவை.

ழெசிகா : அது என் தப்பா? ஏன் எனக்கு ஒன்றுமே கற்பிக்கவில்லை? நீங்கள் ஏன் எனக்கு எதையுமே விளக்கிச் சொல்லவில்லை? உங்கள் ஆண் ஆதிக்க உலகத்தில் என்னை கொண்டு வந்துவிட்டுப் பத்தொன்பது வருடங்களாகிவிட்டன, எல்லாம்

சரிவரப் போய்க்கொண்டிருக்கின்றன என்றும், ஜாடிகளில் பூக்களை ஆழகாக எடுத்து வைப்பதைத் தவிர வேறு எதைப் பற்றியும் நான் கவனிக்கத் தேவையில்லை என்றும் என்னை நம்பவைத்தீர்கள். ஏன் என்னிடம் பொய் சொன்னீர்கள்? ஏன் என்னை அறியாமையிலேயே வைத்திருந்தீர்கள்? சற்றும் எதிர்பாராதபோது இவ்வுலகம் எல்லாக் கோணத்திலும் இடிந்து விழுந்துகொண்டிருக்கிறது என்றும், நீங்கள் எல்லோரும் கையாலாகாதவர்கள் என்றும் திடும்என்று ஒருநாள் என்னிடம் சொல்வதற்குத்தானா? திடீரென்று சொல்லி, கொலை அல்லது தற்கொலை இவை இரண்டுக்குள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி என்னைக் கட்டாயப்படுத்து வதற்குத்தானா? முடியாது. எனக்குத் தேர்ந்தெடுக்க இஷ்டமில்லை. நீங்கள் அவரைக் கொல்லவும் கூடாது, மற்றவர்களும் உங்களைக் கொல்லக்கூடாது. இந்தச் சுமையை ஏன் என் தலைமேல் ஏற்ற வேண்டும்? நான் ஒன்றும் செய்யவில்லை. எல்லாவகையிலும் நான் நிரபராதி.

உய்கோ : சரி, போதும். நான் இனி உன்னிடம் ஒன்றும் கேட்கவில்லை.

ழெசிகா : இப்போது காலம் கடந்து போய்விட்டது. என்னையும் சுழலில் இழுத்துவந்துவிட்டீர்கள். இப்போது நான் ஒரு முடிவெடுத்தாக வேண்டிய நிலை, உங்களுக்கும் எனக்குமாகச் சேர்த்து. நான் தேர்ந்தெடுக்க வேண்டியது, உங்கள் வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்ட என்னுடைய வாழ்க்கையுமாகும். அதுவும் நான்... ஐயோ! தெய்வமே... என்னால் முடியவில்லை.

உய்கோ : பார்த்தாயா? அதுதான். (சிறு மௌனம். உய்கோ கட்டிலில் அமர்ந்திருக்கிறான், எங்கோ சூன்யத்தை வெறித்து நோக்கிய படி. ழெசிகா அவன் அருகில் வந்தமர்ந்து அவன் கழுத்தைச் சுற்றித் தன் கையால் அணைத்துக் கொள்கிறாள்).

ழெசிகா : ஒன்றும் சொல்ல வேண்டாம். என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். நான் உங்களோடு பேச்சுக் கொடுக்க மாட்டேன். உங்கள் சிந்தனையோட்டத்தை நான் தடுக்கப் போவதில்லை.



ஆனால் நான் இங்கு உங்களுடன் இருப்பேன். காலைப் பொழுது சில்லென்றிருக்கிறது. என் கதகதப்பு உங்களுக்கு இதமாக இருக்கும். நான்தான் வேறு எதுவும் கொடுக்க முடியவில்லையே. தலைவலி இன்னும் இருக்கிறதா?

உய்கோ : ஆமாம்.

ழெசிகா : என் தோள்மீது சாய்ந்துகொள்ளுங்கள். உங்கள் நெற்றி கொதிக்கிறது (அவன் தலையை வருடுகிறாள்) பாவம், இந்த தலை!

உய்கோ : (திடீரென்று நிமிர்ந்து கொண்டு) போதும்.

ழெசிகா : (இதமான அன்புடன்) உய்கோ!

உய்கோ : நடிக்கிறாயா?

ழெசிகா : இல்லை, நான் நடிக்கவில்லை—இனி எப்போதும் நடிக்க மாட்டேன்.

உய்கோ : நம்மிடையே நிஜமான காதல் இல்லை என்று உனக்குத் தெரியாதா?

ழெசிகா : இன்றைய இரவில் முக்கியப் பிரச்சினை நமது காதல் அன்று, நாளை நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதுதான்.

உய்கோ : ஒன்றுமட்டும் எனக்குச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்ததென்றால்... (திடீரென்று) ழெசிகா, இதோ என்னைப் பார். உனக்கு என்மேல் அன்பு இருக்கிறது என்று கூற முடியுமா? (அவள் அவனையே பார்க்கிறாள். மௌனம்) பார்த்தாயா? இந்த உறுதிமொழி கூட எனக்குக் கிட்ட வில்லையே

ழெசிகா : உங்கள் நிலை என்ன? நீங்கள் என்மேல் அன்பு கொண்டிருப்பதாக நினைக்கிறீர்களா? (அவன் ஒன்றும் பதில் கூறவில்லை) இப்போது உங்களுக்குப் புரிகிறதா? (சிறிது நேரத்துக்கு பின், திடீரென்று) நீங்கள் ஏன் அவரிடம் பேசி அவரை ஒத்துக்கொள்ளச் செய்யக்கூடாது?

உய்கோ : ஒத்துக்கொள்ளச் செய்வதா? யாரை, எதரரையா?



ழெசிகா : அவர் செய்வது தவறு என்கிறீர்கள். அதை அவரிடமே எடுத்துச் சொல்லிப் புரியவைக்க வேண்டியதுதானே?

உய்கோ : அவரிடம் முடியாது. அவர் உடும்புப்பிடிக்காரர்.

ழெசிகா : உங்கள் கருத்துக்களை மற்றவர் ஒத்துக்கொள்ளும்படி செய்ய முடியாவிட்டால் அவை சரியானவை என்று மட்டும் எப்படி உங்களுக்குத் தெரியும்? உய்கோ, இதோ பாருங்கள். நீங்கள் அவருக்கு புரிய வைத்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எல்லோரும் ஒன்றுபட்டுவிடுவார்கள். எல்லோருக்கும் திருப்தியாகவும் இருக்கும். நீங்கள் அனைவரும் இணைந்து பணியாற்றலாம். தயவுசெய்து கொஞ்சம் முயற்சி செய்யுங்கள். நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அவரைக் கொல்வதற்கு முன் ஒரு தடவையாவது முயன்று பாருங்கள். (கதவு தட்டப்படுகிறது. உய்கோ நிமிர்ந்து நிற்கிறான். அவன் கண்களில் ஓர் ஒளி)

உய்கோ : இது ஒல்காதான்! திரும்பி வந்துவிட்டாள். அவள் திரும்பி வருவாள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். விளக்கை அணைத்துவிட்டுப்போய்க் கதவைத் திற.

ழெசிகா : இந்த அளவுக்கு அவள் உங்களுக்குத் தேவைப்படுகிறாள்! (விளக்கை அணைத்துவிட்டுச் சென்று கதவைத் திறக்கிறாள். எதரர் உள்ளே நுழைகிறான். கதவு மூடியவுடன் உய்கோ மீண்டும் விளக்கை ஏற்றுகிறான்)

### காட்சி — 3

உய்கோ, ழெசிகா, எதரர்.

ழெசிகா : (எதரரை அடையாளம் கண்டுகொண்டு) ஓ....

எதரர் : இருட்டில் இருப்பது உங்களுக்கு வழக்கமா?

ழெசிகா : அப்படி இருக்கவேண்டிய கட்டாயம். என் கண்கள் களைப்பினால் சோர்வடைந்திருக்கின்றன.

எதரர் : அப்படியா! (சிறிது நேரத்துக்குப் பின்) நான் சற்றே அமரலாமா? (ஒரு நாற்காலியில் அமர்கிறான்) என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.



உய்கோ : என்னிடம் எதாவது சொல்ல வந்தாயா?

எதரர் : இல்லை இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. மாலையில் உன் முகம் கோபத்தால் சிவந்ததைப் பார்த்து எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

உய்கோ : நான் வந்து...

எதரர் : அதைப்பற்றி நீ ஒன்றும் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை. அது நான் எதிர்பார்த்ததுதான். சொல்லப்போனால் நீ அப்படி எதிர்ப்புக்குரல் எழுப்பியிராவிட்டால் எனக்கு பல சந்தேகங்கள் கூட தோன்றியிருக்கும். உனக்கு நிறைய விஷயங்கள் நான் விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் அதுபற்றியெல்லாம் நாளைக்கு நிறையப் பேசலாம். இன்றைய பொழுது இதோடு போகட்டும். நான் வருவதற்கு முன் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

ழெசிகா : பேசிக்கொண்டிருந்தோம்.

எதரர் : அப்படியா? உங்கள் பேச்சைத் தொடருங்கள். நான் இங்கு இருப்பதைப் பொருட்படுத்த வேண்டாம் (தன் பைப்பை எடுத்து அதில் புகையிலை அடைத்துப் பற்றவைக்கிறான். ஓர் ஆழ்ந்த நிசப்தம்) நடக்கட்டும்.

ழெசிகா : நீங்கள் இங்கு இல்லை என்று நினைத்துக்கொள்வது சங்கடமாக இருக்கிறது.

எதரர் : என்னை வெளியே போ என்று நீங்கள் வெளிப்படையாகவே சொல்லலாம். (உய்கோவிடம்) மேலதிகாரியாகவே இருந்தாலும், அவருக்கு திடீரென்று ஏதோ யோசனை உதயமாகிவிட்ட தென்பதற்காக, நேரங்கெட்ட நேரத்தில் எல்லாம் இங்கு வரவேற்க வேண்டும் என்பது அவசியமில்லை. (சிறிது நேரத்திற்குப் பின்) நான் ஏன் இங்கு வந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. இந்த விஷயத்திற்கு ஒரு முடிவு வரப்போகிறது...

உய்கோ : (ஆர்வமுடன்) எந்த விஷயம்?

எதரர் : கார்ஸ்கி விவகாரம்தான். கொஞ்சம் காதைப் பிடித்துத் திருகினால்தான் வழிக்கு வருகிறான். ஆனால் நான் எதிர்பார்த்ததைவிடச் சுலபமாகவே முடிந்துவிடும்.

உய்கோ : (ஆவேசத்துடன்) நீ.......

எதரர் : உஸ்.... நாளைக்கு.... நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். (சிறிது நேரத்திற்குபின்) சற்று முன்பு இங்கே விளக்கு எரிந்ததே.

ழெசிகா : ஆமாம்.

எதரர் : என் அறையில் வெளிச்சம் இருந்தால் என்னைக் குறி வைப்பது எளிதாக இருக்குமே என்பதால், ஜன்னலுக்குப் பின்னால் இருட்டில் நின்று கொண்டு நான் பார்த்தேன். மையிருட்டு, நிசப்தம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தீர்களா? உங்கள் ஜன்னல் இடுக்குகள் வழியாக ஒளி தெரிந்தது. (சிறிது நேரத்துக்குப் பின்) மரணம் நமக்கு மிக அருகில் வந்து உரசிச் சென்றுவிட்டது.

ழெசிகா : ஆமாம்.

எதரர் : (லேசாக சிரித்து) மிக மிக அருகில்தான். (சிறிது நேரத்துக்குப் பின்) மெல்ல என் அறையிலிருந்து வெளியே வந்தேன். நீ தாயாகப்போவதாக ஸ்லிக் என்னிடம் சொன்னான்....

ழெசிகா : (அவசரமாக) – அது உண்மையில்லை.

உய்கோ : இதோபார், ழெசிகா! ஸ்லிக்கிடம் சொன்னதை எதரரிடம் மாத்திரம் ஏன் ஒளிக்க வேண்டும்?

ழெசிகா : ஸ்லிக்கிடம் விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன்.

எதரர் : (அவளை நிதானமாக ஏற இறங்கப் பார்த்துவிட்டு) சரி. (சிறிது நேரத்துக்குப் பின்) நான் போய்த் தூங்கப் போகிறேன். அது ஒரு கானல்நீர்!

ழெசிகா : எது கானல்நீர்?

எதரர் : (கைகளை விரித்துக் காட்டி) இது எல்லாம்தான். நீயும்



கூடத்தான்... உழைக்க வேண்டும். செய்யக்கூடியது அது ஒன்றுதான். பக்கத்து ஊருக்கு தொலைபேசியில் சொல்லி ஆசாரியை வரச்சொல்ல வேண்டும். அலுவலக அறை ஜன்னலைப் பழுதுபார்க்க வேண்டும் (அவனைப் பார்த்து) நீ மிகவும் நிலை குலைந்து விட்டாய் போலிருக்கிறது. சுய நினைவு இழக்கும்வரை குடித்தாய் என்று கேள்விப்பட்டேன். இன்று இரவு நன்றாக உறங்கு. நாளை காலை ஒன்பது மணிக்குமேல் வந்தால் போதும்.

(அவன் கிளம்புகிறான். உய்கோ ஓர் அடி எடுத்து வைக்கிறான். ழெசிகா அவர்கள் இருவருக்கும் இடையே வந்து)

ழெசிகா : உய்கோ, இதுதான் தக்க சமயம்.

உய்கோ : எதற்கு?

ழெசிகா : இவரிடம் பேசி மனத்தை மாற்ற முயற்சிசெய்யப் போவதாக என்னிடம் சொன்னீர்களே!

எதரர் : என் மனத்தை மாற்றவா?

உய்கோ : ழெசிகா வாயை மூடு. (அவளை ஒதுக்கித்தள்ள முயற்சி செய்கிறான். ஆனால் அவள் எதிரே வந்து நிற்கிறாள்)

ழெசிகா : இவருக்கும் உங்களுக்கும் கருத்துவேறுபாடு!

எதரர் : (விளையாட்டாக) அதைத்தான் அப்போதே அறிந்து கொண்டேனே!

ழெசிகா : உங்களிடம் விளக்கிச் சொல்ல விரும்புகிறார்.

எதரர் : நாளைக்கு – நாளைக்குச் சொல்லலாம்.

ழெசிகா : நாளைக்குள் காலம் கடந்துவிடும்

எதரர் : ஏன்?

ழெசிகா : (உய்கோவின் முன் நின்றுகொண்டு) இவர் சொல்கிறார்... வந்து.... இவர் சொல்கிறார்.... வந்து இவர் சொல்வதை நீங்கள் கேட்காவிட்டால், உங்களுக்குச் செயலாளராகப் பணியாற்ற இவருக்கு விருப்பமில்லை என்கிறார். உங்களுக்கும் தூக்கம் வரவில்லை. இவருக்கும் தூக்கம் வரவில்லை. இரவு



முழுப்பொழுதும் இருக்கிறது... மேலும் இருவரும் மரணத்தின் வாயிற்படிவரை சென்று தப்பியிருக்கிறீர்கள்! அதனால் சமரசத்திற்கு அதிக வாய்ப்பிருக்கிறது.

உய்கோ : அந்தப் பேச்சை விட்டுத்தள்ளு என்றுதான் நான் சொல்கிறேனே.

ழெசிகா : உய்கோ, எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். (எதரரிடம்) நீங்கள் ஒரு சமூகத்துரோகி என்று இவர் சொல்கிறார்.

எதரர் : சமூகத்துரோகி மட்டும்தானா?

ழெசிகா : நோக்கத்தை விலக்கிச் செயலை மட்டுமே தனித்துப் பிரித்துப் பார்த்தால் நீங்கள் ஒரு சமூகத்துரோகி என்று சொல்கிறார்.

எதரர் : (முகபாவமும் குரலும் மாறுகிறது) அப்படியா? தம்பி, சரி.... சரி சொல்லு சொல்லு. உன் மனத்திலே என்ன எண்ணங்கள் இருக்கின்றனவோ, அவை எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துவிடு. அடக்கித்தான் வைத்துக்கொள்ள முடியவில்லையே. நான் தூங்கச் செல்லும் முன்பாக இந்த பிரச்சினையைத் தீர்த்தே ஆகவேண்டும். என்ன காரணத்திற்காக என்னைத் துரோகியென்று சொல்கிறாய்?

உய்கோ : உனக்கு இஷ்டப்பட்ட கூட்டணிகளிலெல்லாம், கட்சியை மாட்டிவிட உனக்கு எந்த உரிமையும் கிடையாது.

எதரர் : ஏன் கிடையாது?

உய்கோ : நம் கட்சி அரசுக்கெதிரான ஒரு புரட்சி இயக்கம். இதை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கச் செய்ய முயற்சி செய்கிறாய்!

எதரர் : புரட்சி இயக்கங்கள் எல்லாமே அதிகாரத்தைப் பிடிப்பதற்காக ஏற்பட்டவைதான்.

உய்கோ : அதிகாரத்தைப் பிடிப்பதற்கு, அதாவது ஆயுதபலத்தைக் கொண்டு பிடிப்பதற்குத்தான்; குதிரைவியாபாரத் தரகு பேரம் பேசி வாங்குவதற்காக அன்று.



எதரர் : ரத்தம் சிந்தவில்லையே என்பதுதான் உன் குறையா? பலாத்காரத்தின் மூலமாக நம்மை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முடியாது என்பதை நீ உணரவேண்டும். எனக்கும் இதில் ஏமாற்றம்தான். ஆனாலும் நிலைமை அதுதான். உள்நாட்டுக் கலகம் என்று வந்தால், பெண்டகானிடம்தான் ஆயுதங்கள் உள்ளன; படைத்தலைவர்களும் இருக்கின்றனர். அவர்களது கட்டமைப்புதான் புரட்சி இயக்கங்களை எதிர்த்து ஒடுக்கும் சக்தியாக உருவாகும்.

உய்கோ : உள்நாட்டுக் கலகத்தைப் பற்றி நான் ஒன்றும் பேசவில்லையே. எதரர், எனக்கு உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீயேதான் சொன்னாய் – சிவப்புப்படை இடைக்கால இளவரசரை விரட்டிவிடும், அதிகாரம் முழுவதும் நம் கைக்கு ஏகபோகமாக வந்துவிடும் என்று சொன்னாய். அப்படியானால் அதுவரை காத்திருக்கக் கொஞ்சம் பொறுமைதானே தேவை?

எதரர் : அதிகாரம் கிடைத்தால் அதை எப்படித் தக்கவைத்துக் கொள்வது? (சிறிது நேரத்துக்குப் பின்) சிவப்புப்படை எல்லையைத் தாண்டித் திரும்பிச் சென்றவுடன், நமக்கு மிகவும் நெருக்குதலை உண்டாக்கக்கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என்று திட்டவட்டமாகக் கூறுவேன்.

உய்கோ : சிவப்புப்படை....

எதரர் : ஆமாம்.... ஆமாம்.... ஆனால் உனக்கு ஓர் உண்மை அவசியம் தெரிந்திருக்க வேண்டும். யுத்த களத்தில், விடுதலைப் படைகளாயினும் சரி, அல்லது மற்ற படைகளாயினும் சரி, எல்லாப் படைகளுக்கும் இடையே ஒரு முக்கிய ஒற்றுமை உண்டு. அவை தாம் ஆக்கிரமித்த நாட்டின் வளத்தை உண்டுதான் வாழும். நமது விவசாயிகள் ருஷ்யர்களை வெறுக்கும் நிலை வரும். இது தவிர்க்க இயலாதது. இந்நிலையில், ருஷ்யர்களால் பதவியில் அமர்த்தப்பட்ட நம்மீது மக்களுக்கு எப்படி அன்பிருக்கும்? வெளிநாட்டானுடைய கட்சி என்றோ, இல்லை அதைவிடக் கேவலமான பெயரோதான்

நமக்கு வந்து சேரும். கார்ஸ்கி கட்சி மறுபடியும் தலைமறைவுக் கட்சியாகிவிடும். அது தன்னுடைய கோஷங்களை கூட மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

உய்கோ : வந்து... நான்...

எதரார் : இதைத்தவிர வேறு ஒரு விஷயமும் இருக்கிறது. நாடு ஏழ்மையாகிப் பசிபட்டினியால் பீடிக்கப்படும். அதுவே யுத்த களமாகவும் மாறலாம். தற்போது இருக்கும் இடைக்கால அரசினை அடுத்து அதிகாரத்துக்கு வரும் எந்த ஆட்சியும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கும். இதனால் மக்களுடைய வெறுப்பையே சம்பாதித்துக்கொள்ள வேண்டிவரும். சிவப்புப் படை வெளியேறிச் சென்ற உடனேயே ஒரு பெரிய கிளர்ச்சிப் போராட்டம் உருவாகும்.

உய்கோ : போரட்டத்தைத் திண்மையான முறையில் எதிர்கொள்ள வேண்டும். இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம்.

எதரார் : இரும்புக்கரத்துக்கு எங்கே போவது? புரட்சிக்குப் பின்னும் நீண்டகாலம் நமது தொழிலாளர்கட்சிதான் மிகவும் பலமற்றதாக இருக்கும். இரும்பாவது கரமாவது? புர்ழுவாக்கள் கட்சி எல்லாவற்றையும் சீர் குலைத்து நாசவேலையில் ஈடுபட்டு விடும். விவசாயிகள் கட்சி நம்மைப் பட்டினி போடுவதற்காகவே தான்ய விளைச்சல்களுக்கு நெருப்புவைத்துக் கொளுத்தி விடும்.

உய்கோ : சரி, அதற்குப் பிறகு? போல்ஷவிக் கட்சி இவை போன்ற சூழ்நிலைகளை 1917இல் சந்திக்கவில்லையா?

எதரார் : ஆனால் அது வெளிநாட்டார் தயவினால் திணிக்கப்பட்டது இல்லை. நீ சிறுபையன். இப்போது நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கோள், தம்பி! புரிந்துகொள்ள முயற்சிசெய். கார்ஸ்கியின் முற்போக்குவாதிகளுடனும், இடைக்கால அரசரின் வலதுசாரி மிதவாதிகளுடனும் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றுவோம், சண்டை வன்முறை எதுவுமின்றி. தேசிய ஒருங்கிணைப்பு என்ற பெயரில் வேற்று



நாட்டாரால் திணிக்கப்பட்டவர்கள் என்று நம்மையாரும் குறைகூற முடியாது. எதிர்ப்புக் கமிட்டியிலே சரிபாதி வாக்குகள் கேட்டிருக்கிறேனே தவிர, இலாக்காக்கள் பங்கீட்டில் பாதி கேட்கும் முட்டாள்தனமான செயலைச் செய்யமாட்டேன். நாம் ஒரு சிறுபான்மை நிலையிலேயே இருக்க வேண்டும். மக்களிடம் கெட்ட பெயர் வரக்கூடிய கசப்பான நடவடிக்கைகளின் பொறுப்பை மற்ற கட்சிகளுக்கு விட்டுவிட்டு, நாம் சிறுபான்மையாகவே இருந்து ஆட்சியில் உள்ளிருந்து கொண்டே எதிர்ப்புக்களைத் தெரிவித்துக் கொண்டு, மக்கள் மனத்தில் நல்ல பெயர் வாங்கி வரவேண்டியது. மற்றவர்கள் இக்கட்டான நிலையில் சிக்கியிருக்கிறார்கள். இரண்டே வருடத்தில் தாராளக்கொள்கை தோல்வியடைவதை நீ காணலாம். பிறகு நாட்டு மக்களே நமக்கு ஒரு வாய்ப்பு அளிக்க விரும்பி ஆட்சியை நம்மிடம் ஒப்படைப்பார்கள்.

உய்கோ : ஆனால் அதற்குள் கட்சியே சீரழிந்துபோய்விடும்!

எதரார் : சீரழிந்து போய் விடுமா?! எப்படி?

உய்கோ : கட்சிக்கு ஒரு திட்டம் இருக்கிறது. அதுதான் சோஷலிச பொருளாதாரத்தைக் கொண்டுவருவது. இந்தக் குறிக் கோளை எய்த ஒரு வழிமுறையும் இருக்கிறது. அதுதான் வர்க்கப்போராட்டத்தைக் கருவியாகக் கொள்வது. ஆனால் நீ கட்சியைப் பயன்படுத்தி வர்க்கப் போராட்டத்துக்குப் பதிலாக வர்க்க ஒத்துழைப்பு எனும் கொள்கையைக் கடைப்பிடிக்கப்போகிறாய். முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பின்னணியாகக் கொண்டு பலப்பல வருடங்கள் பொய் சொல்லப் போகிறாய். சூழ்ச்சி செய்யப்போகிறாய். சந்தர்ப்பவாதத்தில் திசை மாறிக்கொண்டு, கொள்கைகளை ஒவ்வொன்றாக விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்ளப் போகிறாய். நீ அங்கம் வகிக்கும் அரசு எடுக்கும் பிற்போக்கு நடவடிக்கைகளை நமது கட்சித் தோழர்கள் மத்தியில் நியாயப்படுத்தப்போகிறாய். யாருக்கும் ஒன்றும் புரியாது.



தீவிரக் கொள்கைப் பிடிப்புக் கொண்டவர்கள் நம்மைவிட்டுப் போய்விடுவார்கள். மற்றவர்கள் நீ காட்டப்போகும் சந்தர்ப்பவாதப் புது அரசியல் கலாசாரத்துக்குத் தம்மை மாற்றிக் கொள்ளப் போகிறார்கள். நம்மிடையே புல்லுருவிகள் நுழைந்து விடுவார்கள். நாம் சுயஉருவம் இழந்து திக்குத் தெரியாமல் திண்டாடி மேலோட்டமாகச் சீர்திருத்தங்கள் சில செய்து, தேசியவாதம் பேசும் வலதுசாரிகளாகவே மாறிவிடுவோம். பிறகு நம்மை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டிய வேலையைப் புர்ழுவா கட்சி எளிதில் செய்துவிடும். எதரார், இக்கட்சி உன் கட்சி. இதை உருவாக்கிக்கொண்டு வருவதற்கு நீ பட்ட கஷ்டங்களை மறந்திருக்கமாட்டாய். என்னென்ன தியாகங்கள் செய்ய வேண்டியிருந்தது என்பதையும், எவ்விதக் கட்டுப்பாடுகளை வலியுறுத்த வேண்டியிருந்தது என்பதையும் நீ நன்கு அறிவாய். இதையெல்லாம் உன் கையாலேயே பலிகொடுத்து விடவேண்டாம் என்று நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

எதரார் : எத்தனை வெற்றுப் பேச்சுக்கள்! சில துணிச்சலான முடிவுகளை எடுக்கத் தயக்கம் இருந்தால் அரசியலுக்கு வரக்கூடாது.

உய்கோ : இந்த அளவுக்கு அபாயங்களை வலுவில் சென்று வரவேற்றுச் சுமத்திக்கொள்ள நான் விரும்பவில்லை.

எதரார் : மிகவும் சரி, பின் எப்படி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வது?

உய்கோ : ஆட்சியைப் பிடிக்காமலேயே இருந்துவிடுவது.

எதரார் : உனக்கு என்ன பைத்தியமா? ஒரு சோஷலிசப்படை இந்நாட்டைப் பிடிக்கப்போகிறது. அது வெளியேறுமுன் அதன் உதவியைப் பெறாமல் விட்டுவிடுவதா? இதைப் போன்ற ஒரு வாய்ப்பு இனி என்றுமே வரக்கூடியது இல்லை.

உய்கோ : இத்தகைய விலை கொடுத்து அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டியது இல்லை.



எதரார் : கட்சி என்பது, பந்தயக்குதிரைகளைக் கட்டிவைக்கும் குதிரைலாயம் என்று நினைத்தாயா? எதையும் வெட்டப் போவதில்லை என்றால் ஒரு கத்தியை தினமும் தீட்டிக் கொண்டிருப்பதனால் என்ன பயன்?! கட்சி என்பது ஒரு கருவி மட்டுமே. ஒரே லட்சியம் அதிகாரத்தைப் பிடிப்பதுதான்.

உய்கோ : அல்ல. ஒரே லட்சியம் நம் கொள்கைகளை வெற்றிபெறச் செய்வதுதான். நம் கொள்கைகள் அனைத்திற்கும், வெற்றி! அதிலும் நம் கொள்கைகளுக்கு மாத்திரமே வெற்றி!

எதரார் : உண்மைதான். உன்னிடம் ஏதேதோ கொள்கைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் போய்விடும்.

உய்கோ : கொள்கைகள் எனக்கு மட்டும்தான் இருக்கின்றன என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாயா? இடைக்கால அரசரின் காவல்துறையினால் கொல்லப்பட்டு இறந்தார்களே, நம் தோழர்கள். கொள்கைகளுக்காகத்தானே அவர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள்? அவர்களைக் கொன்றவர்களுடன் நமது கட்சியை கைகோத்து உறவாடச் செய்வது நாம் அவர்கள் நினைவுக்குச் செய்யும் துரோகச்செயல் ஆகாதா?

எதரார் : செத்தவர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர்கள் கட்சிக்காக இறந்தார்கள். கட்சி தனக்கு எது தேவையோ, அதைத் தீர்மானித்துக்கொள்ளும். எனது அரசியல் உயிருள்ளவர்களுக்காக, உயிருள்ளவர்களைக் கொண்டு செய்யப்படுவது.

உய்கோ : உயிருள்ளவர்கள் உங்கள் கூட்டணித் திட்டங்களை ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறாயா?

எதரார் : மெல்லமெல்ல அவர்களை ஒத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

உய்கோ : பொய்களைச் சொல்லியா?

எதரார் : சிலசமயம் பொய்களைச் சொல்லியும்தான்.

உய்கோ : நீ... உன்னைப் பார்த்தால் எவ்வளவு உறுதியானவனாக, உண்மையானவனாகத் தெரிகிறது! நம் தோழர்களிடமே பொய் சொல்லவும் இசைவாய் என்பதை ஏற்க முடியவில்லை.

எதரர் : ஏன் அப்படி? போர்க்காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்–கிறோம். மணிக்கு மணி என்ன நடவடிக்கைகள் என்பதைப் போர் வீரனுக்குத் தெரிவித்துக்கொண்டிருப்பது வழக்கமில்லையே.

உய்கோ : எதரர்! பொய் என்றால் என்னவென்று உன்னைவிட எனக்கு நன்றாகவே தெரியும். என் தந்தை வீட்டில் எல்லோரும் ஒருவருக்கொருவர் பொய் சொல்லிக் கொண்டிருப்பார்கள். என்னிடமும் எல்லோரும் பொய் சொல்வார்கள். நம் கட்சியில் சேர்ந்த பிறகுதான் நான் நிம்மதியாய் மூச்சு விடுகிறேன். மற்ற மனிதர்களிடம் பொய் சொல்லாத மனிதர்களை முதன் முறையாகக் கண்டேன்.

எதரர் : எதைப் பற்றிப் பேசுகிறாய்?

உய்கோ : நம் கட்சியைப் பற்றித்தான்.

எதரர் : நமது கட்சி பற்றியா? இதில் எந்தக் காலத்திலும் சிறிது பொய் சொல்லப்பட்டுக்கொண்டுதான் வந்திருக்கிறது, மற்றெங்கிலும் போலவேதான், உய்கோ! இப்போது உன்னையே எடுத்துக் கொள்வோமே. உனக்கு நீயே பொய் சொல்லிக் கொண்டதில்லை? இதுவரை நீ பொய்யே சொன்னதில்லையா? இந்த நிமிடத்தில்கூட நீ பொய் பேசவில்லை என்று உன்னால் நிச்சயமாகக் கூற முடியுமா?

உய்கோ : நம் தோழர்களிடம் நான் என்றுமே பொய் சொன்னதில்லை. நான் வந்து... மனிதர்கள் மண்டையில் பொய்யைத் திணிக்கும் அளவுக்கு நமக்கு அவர்களிடம் வெறுப்பு இருந்தால், பின் மனிதர்கள் விடுதலைக்குப் போராடுவதில் என்ன பிரயோஜனம்?

எதரர் : நான் தேவையானபோது பொய் சொல்வேன். எனக்கு யார்மீதும் வெறுப்பும் இல்லை. பொய்யைக் கண்டு பிடித்தது



நான் இல்லை. வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்ட சமுதாயத்தில் அது தோன்றியிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போதே அதையும் பிதுரார்ஜிதமாக நம்முடன் கொண்டு வந்துள்ளோம். நாம் பொய் சொல்ல மறுப்பதன் மூலமாகப் பொய்யை ஒழிக்க முடியாது. வர்க்கங்களை ஒழிப்பதற்கான சகல வழிகளையும் கடைப்பிடிப்பதன் மூலம்தான் அதை ஒழிக்க முடியும்.

உய்கோ : எல்லா வழிகளும் நல்லவை அல்ல.

எதரர் : வேண்டிய பலனைத் தருமாயின் எல்லா வழிகளும் நல்லவை தான்.

உய்கோ : அப்படியென்றால் எந்த உரிமையின் பெயரால், இடைக்கால அரசரின் கொள்கையை எதிர்க்கிறாய்? நமது தேசிய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இதுதான் மிகவும் சிறந்த வழி என்ற காரணத்தால் அவர் ருஷ்யாவுடன் போர் தொடுத்திருக்கிறார்.

எதரர் : நான் அதை எதிர்க்கிறேன் என்றா நினைத்துக் கொண்டிருக் கிறாய்? அவர் வர்க்கத்தைச் சேர்ந்தவன் எவனும் இந்தக் கட்டத்தில் என்ன செய்திருப்பானோ, அதையேதான் அவரும் செய்திருக்கிறார். நாம் மனிதர்களை எதிர்த்தோ, அல்லது ஏதோ ஒரு கொள்கையை எதிர்த்தோ போராடவில்லை. நாம் போராடுவது இத்தகைய கொள்கைகளையும், மனிதர்–களையும் தோற்றுவிக்கும் வர்க்கத்தை எதிர்த்துதான்.

உய்கோ : உன்னுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள அவரை அழைப்பதுதான் அத்தகைய போராட்டத்துக்கு மிகச் சிறந்த வழியாக நினைக்கிறாயா?

எதரர் : ஆமாம், நிச்சயமாக. இன்றைய நிலையில் அதுதான் மிகச் சிறந்த வழி. (சிறுமௌனத்துக்குப் பின்) – உன் தூய்மையின்மேல் எவ்வளவு ஆழ்ந்த பிடிப்புடன் இருக்கிறாய்., தம்பி! நீ உன் கைகளில் கறை படிந்துவிடக்கூடாது என்பதில்



குறியாக இருக்கிறாய். மிகவும் சரி. அப்படியே இரு. இதனால் யாருக்கு என்ன பயன்? நீ எதற்காக எங்களுடன் வந்து சேர வேண்டும்? தூய்மை என்பது துறவிகள், சாமியார்கள் பேச்சு! உன்னைப் போன்ற அறிவுஜீவிகளும் தீவிர பூர்ழுவாக்களும் ஒன்றுமே செய்யாமல் இருப்பதற்கு இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! ஒன்றுமே செய்யாமல் இப்படி அப்படி அசையாமல் முழங்கைகளை உடலுடன் இறுக்கிக் கட்டிக்கொண்டு கைகளில் உறைகளையும் போட்டுகொண்டிருக்கிறீர்கள். நான் அப்படி இல்லை. என் கைகள் அழுக்கானவை; இரத்தம், மலம் ஆகியவற்றில் முழங்கைவரை புதைந்து துழாவியவை. ஆமாம் அப்படித்தான். பின் என்ன? குற்றமற்ற தூய்மையுடன் ஆட்சி செய்யமுடியும் என்று நினைக்கிறாயா?1

உய்கோ : நான் சொன்ன கருத்துக்கள் என்னுடையவை மட்டுமல்ல. வேறு சிலரும் இப்படியே நினைக்கிறார்கள் என்பதுதான் உனக்குச் சற்று அதிர்ச்சியாக இருக்கலாம்.

எதரர் : வேறு சிலரா? அப்படியென்றால் இங்கு வருவதற்கு முன்பே என்னுடைய பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் சில உனக்குத் தெரியுமா?

உய்கோ : தெரியவே தெரியாது. ஆனால் இதுபற்றிப் பொதுப்படையாக நமது கட்சியில் பேச்சு காதில் விழுந்தது. பெரும்பாலான வர்களுக்கு இதில் உடன்பாடு இல்லை. மேலும் அவர்களில் யாரும் என்னைப் போலப் பெரிய இடத்துப் பிள்ளைகள் இல்லை என்பதை மட்டும் நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

எதரர் : சிறு பையன் நீ! ஒரு விஷயத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். நம் கட்சியில் உள்ளவர்களிலேயே என்னுடைய அணுகுமுறையை ஒத்துக்கொள்ளாதவர்கள் யார் யார் என்று எனக்குத் தெரியும். இன்னொன்றும் நான் உனக்குச் சொல்லி வைக்கிறேன். அவர்களெல்லாம் கூட



என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களேயன்றி உன் இனத்தைச் சேர்ந்தவர்களில்லை. இதை நீயே விரைவில் புரிந்துகொள்வாய், என் பேச்சுவார்த்தைத் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை என்றால், அதற்குக் காரணம், இது சரியான தருணம் இல்லை என்று அவர்கள் நினைப்பதுதான்; சூழ்நிலைகள் வேறுவிதமாக இருந்தால் அவர்களே முன்னின்று இதையேதான் செய்வார்கள். ஆனால் நீயோ இதை ஓர் இலட்சியப் பிரச்சினை ஆக்குகிறாய்.

உய்கோ : இலட்சியத்தைப் பற்றி யார் பேசியது?

எதரர் : நீ இதை ஒரு இலட்சியப் பிரச்சினையாகப் பார்க்கவில்லையா? அப்படியானால் சரி. நான் இப்போது சொல்லப்போவது உனக்குத் தகுந்த சமாதானமாக இருக்கும் பார்: இடைக்கால அரசருடன் நாம் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால், அவர் போரை நிறுத்துவார். இல்லிரியா ராணுவம் போரிடாது; ருஷ்யர்கள் வந்து தங்கள் ஆயுதங்களைக் கீழே போடும்படி செய்யும்வரை சும்மா காத்திருக்கும். ஆனால் நம்மிடையே பேச்சுவார்த்தை முறிந்துபோய்விட்டால், தன் தோல்வி நிச்சயம் என்று அவருக்குத் தெரிந்துவிடும். படைகளை வெறிநாய்களைப் போல் ஏவி இறுதிவரை போரைத் தொடரச் செய்வார். பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் இதில் பலியாக நேரும். இப்போது என்ன சொல்கிறாய்? (சிறு மௌனத்துக்குப் பின்) உம்... இப்போது என்ன சொல்கிறாய்? ஒரு லட்சம் மனித உயிர்களை உன் கைப்பேனாவின் ஓர் அசைவுக் கோட்டினால் கொன்றுவிடலாம் என்று சொல்லப் போகிறாயா?

உய்கோ : (வேதனையுடன்) புரட்சியைப் பூக்களைக்கொண்டு செய்ய முடியாது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது என்றால்....

எதரர் : ஏற்பட்டதென்றால்?

உய்கோ : எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிட வேண்டியது தான்!

எதரர் : பார்த்தாயா! பார்த்தாயா! உனக்கு மனிதர்களைப் பற்றி அக்கறை கிடையாது. உன் கவலையெல்லாம் உன் இலட்சியங்களைப் பற்றித்தான்.

உய்கோ : மனிதர்கள்? நான் ஏன் அவர்களிடம் அன்பு காட்ட வேண்டும்? அவர்களுக்கு என்னிடம் அன்பு இருக்கிறதா?

எதரர் : அப்படியென்றால், நீ ஏன் எங்களுடன் வந்து சேர்ந்தாய்? மனிதர்கள் மேல் அன்பில்லை என்றால், அவர்களுக்காகப் போராடமுடியாது.

உய்கோ : நான் கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் இதன் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதால்தான். எப்போது இது நேர்மையின் பாதையிலிருந்து விலகுகிறதோ, அப்போது நான் இதிலிருந்து வெளியேறிவிடுவேன். மனிதர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவர்களை எப்படி ஆக்க முடியும் என்பதில் தான் என் கவனம்.

எதரர் : எனக்கு மனிதர்களைப் பிடிக்கும். அவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்களோ, அதே நிலையில் – அவர்களுடைய வக்கிரமான பலவீனங்கள், மனத்தின் மலங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிலையிலேயே. அவர்கள் குரல், கைகளின் கதகதப்பு, அவர்கள் உடலை மூடியிருக்கும் தோல், ஆடைகளால் மூடப்படாத முழு நிர்வாணமான அவர்கள் உடல், கவலை தோய்ந்த அவர்கள் பார்வை, அழுக்கி நசுக்கும் சோகத்தையும் சாவையும் எதிர்த்து ஒவ்வொரு நாளும் அவர்கள் நடத்தும் நம்பிக்கையற்ற போராட்டம் – இவை எல்லாமே எனக்குப் பிடிக்கும். உலக மனித இனத்தில் ஒருவர் அதிகமானாலும் அல்லது ஒருவர் குறைந்தாலும் அதை ஒரு பொருட்டாக நினைக்கிறேன். ஆனால் தம்பி, உன்னை எனக்கு நன்றாகத் தெரியும். நீ ஒரு பயங்கரவாதி. உனக்கு மனிதர்களைப் பிடிக்காது. காரணம், உனக்கு உன்னையே பிடிக்காது. தூய்மை என்று நீ பேசுவது சாவைக் குறிப்பது.



புரட்சி என்று நினைத்து, நீ கனவு காண்பது வேறு, எங்கள் புரட்சி வேறு. நீ உலகத்தை மாற்ற விரும்பவில்லை; அதை அழித்துவிட விரும்புகிறாய்.

உய்கோ : (எழுந்துகொண்டு) எதரர்!

எதரர் : இது உன் குற்றமில்லை. உன்னைப் போன்றவர் எல்லோரும் இப்படித்தான். எந்த அறிவுஜீவியும் ஒரு நிஜ புரட்சிக்காரன் இல்லை. அவனிலிருந்து அதிகபட்சம் ஒரு கொலைகாரன் தான் உருவாகமுடியும்.

உய்கோ : கொலைகாரன்... ஆமாம் கொலைகாரன்தான்.

ஜெசிகா : உய்கோ!

(இவர்கள் இருவர் மத்தியில் அவள் வந்து நிற்கிறாள். கதவில் சாவியைச் செருகித் திருப்பும் ஓசை. கதவு திறக்கிறது. ஜார்ஜும், ஸ்லிக்கும் நுழைகிறார்கள்)

## காட்சி – 4

முந்தின காட்சியில் உள்ள பாத்திரங்களுடன்
ஸ்லிக், ஜார்ஜ் ஆகியோர்.

ஜார்ஜ் : நீ இங்கு இருக்கிறாயா? உன்னை எங்கேயெல்லாம் தேடினோம்.

உய்கோ : என் அறைச்சாவியை உங்களிடம் யார் தந்தது?

ஸ்லிக் : எல்லா கதவுகளுக்கும் மாற்றுச் சாவி எங்களிடம் இருக்கிறது. நாங்கள் மெய்க்காப்பாளர்கள் இல்லையா!

ஜார்ஜ் : (எதரரிடம்) எங்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டாயே. ஸ்லிக் தூங்கி விழித்துப் பார்க்கிறான். உன்னைக் காணோம். இப்படிக் காற்று வாங்க நீ கிளம்பும்போது சொல்லிவிட்டுச் செல்வது நல்லது.

எதரர் : (சிரித்துக்கொண்டு) எனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கே தெரியவில்லை. (சற்றுப்பொறுத்து) இதோ உங்களுடனேயே வந்து விடுகிறேன். உய்கோ தம்பி!



மற்றவை நாளை காலை ஒன்பது மணிக்கு. மீண்டும் இது பற்றிப் பேசலாம். (உய்கோ ஒன்றும் பதிலுரைக்கவில்லை) ஜெசிகா, போய் வருகிறேன்.

ஜெசிகா : நாளை பார்ப்போம், எதரர்!

(அவர்கள் வெளியேறுகிறார்கள்)

## காட்சி – 5

ஜெசிகா, உய்கோ

ஜெசிகா : அப்புறம் என்ன?

உய்கோ : நீயும்தான் இங்கு இருந்தாயே. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாயே.

ஜெசிகா : நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

உய்கோ : நான் நினைக்க என்ன இருக்கிறது? நான்தான் உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே, இவன் பிடித்தால் உடும்புப் பிடிதான் என்று.

ஜெசிகா : உய்கோ, அவன் சொல்வதில் நியாயம் இருக்கிறது.

உய்கோ : ஐயோ! பாவம் ஜெசிகா! உனக்கு இதைப்பற்றி என்ன தெரியும்?

ஜெசிகா : உங்களுக்கு மாத்திரம் என்ன? அவனிடம் நேரில் பேசும் போது உங்கள் பேச்சு எதுவும் எடுபடவில்லையே.

உய்கோ : இருக்கலாம்—என்னிடம் பேசுவது அவனுக்கு எளிதாகப் போய்விட்டது. ஆனால் எனக்குப் பதில் என் இடத்தில் லூயி இருந்திருந்தால், இவன் பாச்சா ஒன்றும் அவனிடம் பலிக்காது.

ஜெசிகா : ஒருகால் அவனையும் வழிக்குக் கொண்டு வந்திருக்கலாம், இல்லையா?

உய்கோ : (சிரித்துவிட்டு) உம்... லூயியையா உனக்கு லூயியைப் பற்றித் தெரியாது. அவன் சொல்வது என்றுமே தவறாகப் போக முடியாது.

ஜெசிகா : ஏன் அப்படி?



உய்கோ : அதுதான் லூயி.

ஜெசிகா : உய்கோ, நீங்கள் சொல்வதில் உங்களுக்கே நம்பிக்கை இல்லை. நீங்கள் எதரருடன் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தபோது நான்தான் உங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேனே! அவர் சொல்வது சரிதான் என்று உங்களை உணரச் செய்துவிட்டார்.

உய்கோ : அவர் என்னை ஒன்றும் உணரச்செய்துவிடவில்லை. நண்பர்களிடமே பொய் சொல்லவேண்டும் என்று என்னை ஒத்துக்கொள்ளும்படி செய்ய யாராலும் முடியாது. ஒருகால் அப்படிச் செய்திருந்தால், நாளை அவரைத் தீர்த்துக் கட்டுவதற்கு இதுவே மற்றுமொரு காரணமாக இருக்கும். ஆகவே நாளை காலை வேலையை முடித்து விடுவேன்.

(திரை)

## அரங்கமைப்பு ஆறு

எதரரின் அலுவலகம்

உடைந்த இரண்டு ஜன்னல்கதவுகள் கழற்றி சுவரில் சாத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. சிதறிய கண்ணாடித் துகள்கள் பெருக்கி எடுக்கப் பட்டிருக்கின்றன. ஜன்னல் மேல்பாகத்தில் குமிழ் ஆணிகளால் குத்தப்பட்ட படுக்கைவிரிப்பு ஒன்று ஜன்னலை மறைத்துத் தரையில் புரளத் தொங்குகிறது.

### காட்சி — 1

எதரர், ழெசிகா.

காட்சித் தொடக்கத்தில் எதரர் பைப் பிடித்தவாறு ஸ்டவ்வில் தனக்குக் காப்பி தயாரித்துக்கொண்டிருக்கிறார். கதவு தட்டப்படுகிறது. ஸ்லிக் கதவிடுக்கின் வழியாக தலையை நுழைத்து...

ஸ்லிக் : அந்தப் பெண் உங்களைப் பார்க்க வேண்டுமாம்.

எதரர் : முடியாது என்று சொல்லிவிடு.

ஸ்லிக் : மிகவும் முக்கியம் என்று சொல்கிறாள்.

எதரர் : ம்... உள்ளே வரச் சொல். (ழெசிகா வருகிறாள். ஸ்லிக் வெளியேறுகிறான்) என்ன விஷயம்? (அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை) உள்ளே வா. (அவிழ்ந்த கூந்தல் முன்னால் விழுந்து முகத்தை மறைக்க, கதவுகள் எதிரிலேயே நின்று கொண்டிருக்கிறாள். அவன் அவளை நோக்கிச்செல்கிறான்) என்னிடம் ஏதோ சொல்ல வந்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். (ஆம் என்ற பொருளில் அவள் தலை அசைக்கிறாள்) சரி. சொல்லிவிட்டுப் போய்விடு.

ழெசிகா : எப்போதுமே உங்களுக்கு அவசரம்...

எதரர் : வேலை இருக்கிறது.

ழெசிகா : இப்போது நீங்கள் ஒன்றும் வேலை செய்யவில்லையே. காபிதானே கலந்துகொண்டு இருந்தீர்கள். எனக்கு ஒரு கப் தரமுடியுமா?



எதரர் : ம்.... சரி (சற்று நேரத்துக்குப் பின்) என்ன விஷயம்?

ழெசிகா : எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். உங்களிடம் பேசுவது மிகவும் கடினம். நீங்கள் உய்கோ வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள். அவர் இன்னும் ஷேவிங் கூடச் செய்து கொண்டபாடில்லை.

எதரர் : சரி, இந்தா காபி. உனக்குச் சரியாக ஐந்து நிமிடம் தருகிறேன். அதற்குள் உன்னை தயார்ப்படுத்திக் கொள்.

ழெசிகா : நேற்று இரவு...

எதரர் : ம்... என்ன?

ழெசிகா : நீங்கள் சொன்னதுதான் எனக்கு நியாயமாகப்பட்டது.

எதரர் : நியாயம்? ஒகோ! (சிறிது நேரத்துக்குப்பின்) மிக்க நன்றி! நீ சொல்வது எனக்கு ஊக்கமளிக்கிறது.

ழெசிகா : நீங்கள் என்னைக் கிண்டல் செய்கிறீர்கள்.

எதரர் : ஆமாம்.

ழெசிகா : நான் கட்சியில் சேர்ந்தால், என்னை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்?

எதரர் : எனக்கும் அதுதான் தெரியவில்லை. (சிறிது நேரத்துக்குப் பின்) இதைச் சொல்லத்தான் இப்போது வந்தாயா?

ழெசிகா : இல்லை.

எதரர் : பின் எதற்காக? உய்கோவிடம் சண்டையா? அவனை விட்டுப் பிரிந்துபோய்விடப் போகிறாயா?

ழெசிகா : இல்லை. நான் அப்படிப் பிரிந்து போய்விட்டால் உங்களுக்கு வருத்தமாக இருக்குமா?

எதரர் : வருத்தமா? எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். நிம்மதியாக நான் என் வேலையை பார்க்கலாம்.

ழெசிகா : நீங்கள் உள்ளுக்குள் நினைப்பது வேறு, சொல்வது வேறு.

எதரர் : அப்படியா?



ழெசிகா : ஆம், அப்படித்தான். (சிறிது நேரத்துக்குப்பின்) நேற்று இரவு நீங்கள் அங்கு வந்தபோது தனிமையினால் மிகவும் வாட்டப்படுபவராகத் தோன்றியது.

எதரர் : சரி. அதற்கென்ன?

ழெசிகா : தனிமையில் தவிக்கும் ஓர் ஆணைக் காண்பதே தனி அழகு.

எதரர் : எவ்வளவு அழகு என்றால், உடனே அவருக்குத் துணையாக இருக்கலாமே என்று எண்ணச் செய்யும் அளவுக்கு. அந்த நொடியே அவரின் தனிமை போய்விடும். இந்த உலகமே கோணல்!

ழெசிகா : என்னுடன் நீங்கள் தனிமையாகவே இருக்கலாம். நான் உங்கள் தனிமைக்கு இடையூறு செய்ய மாட்டேன்.

எதரர் : உன்னுடனா?

எதரர் : ஐந்து நிமிடம் ஆகிவிட்டது. ஏதாவது சொல்வதானால் சொல், அல்லது வெளியே போ.

ழெசிகா : நீங்கள் அவருக்கு தீங்கு செய்யமாட்டீர்களே?

எதரர் : யாருக்கு?

ழெசிகா : உய்கோவுக்குத்தான். அவர்பால் உங்களுக்கு நட்புறவு இருக்கிறது இல்லையா?

எதரர் : உணர்ச்சி அடிப்படைப் பேச்சுக்கள் வேண்டாம். அவன் என்னைக் கொல்லப்போகிறான். அப்படித்தானே! அது தானே நீ சொல்ல வந்தது?

ழெசிகா : அவருக்கு எதுவும் தீங்கு செய்யாதீர்கள்.

எதரர் : சரி... அவனுக்குத் தீங்கு ஒன்றும் செய்யமாட்டேன்.

ழெசிகா : விஷயம் உங்களுக்குத் தெரிந்துவிட்டதா?

எதரர் : நேற்றுத்தான்... எப்படி என்னைக் கொல்லப்போகிறான்?

ழெசிகா : எப்படியா?

எதரர் : எந்த ஆயுதத்தினால் என்று கேட்டேன்? குண்டா, துப்பாக்கியா, கைக்கோடாலியா, கத்தியா, விஷமா?



ழெசிகா : துப்பாக்கி.

எதரர் : அது தேவலை.

ழெசிகா : இன்று காலை வரும்போது, துப்பாக்கியுடன் வருவார்.

எதரர் : சரி... சரி... நீ ஏன் அவனைக் காட்டிக்கொடுக்கிறாய்? துரோகமா?

ழெசிகா : இல்லை... ஆனால்...

எதரர் : பின்னே?

ழெசிகா : அவருக்கு உங்களைக் கொல்ல இஷ்டமில்லை. துளிகூட இஷ்டமில்லை. அவருக்கு உங்களை ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனால் அவருக்கு இடப்பட்ட கட்டளை அப்படி. ஒன்று மட்டும் நிச்சயம். இந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியாமல் செய்துவிட்டால், அவர் மனத்துக்குள் மிகவும் சந்தோஷப் படுவார். இருப்பினும் வெளியில் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்.

எதரர் : இது எந்த அளவுக்கு உண்மை என்பது பின்னால்தான் தெரியும்!

ழெசிகா : ஸ்லிக்கிடம் சொல்லி, மெல்ல அவருடைய ஆயுதத்தைப் பறித்துவிடச் சொல்லுங்கள். ஒரே ஒரு துப்பாக்கிதான் வைத்திருக்கிறார். அதைப் பிடுங்கிக்கொண்டுவிட்டால் அவ்வளவுதான்!

எதரர் : இல்லை. அது அவனை அவமானத்துக்கு உள்ளாக்குவதாகும். ஒரு மனிதனின் சுயமரியாதையைக் கேவலப் படுத்தக்கூடாது. நான் அவனிடம் பேசிப்பார்க்கிறேன்.

ழெசிகா : துப்பாக்கியுடனேயே அவரை உள்ளே வரவிடப்போகிறீர்களா?

எதரர் : அதனால் என்ன? நான் அவனை மனமாற்றம் செய்ய விரும்புகிறேன். ஐந்தே ஐந்து நிமிடம்! அபாயம்தான். அதற்குமேல் ஒன்றுமில்லை. கொலையை இன்று காலை செய்யாவிட்டால், இனி என்றுமே செய்யமாட்டான்.

ழெசிகா : (திடீரென்று) அவர் உங்களைக் கொல்வதை நான் விரும்ப வில்லை.

(கதவு தட்டப்படுகிறது)

ஸ்லிக் : உய்கோ வந்திருக்கிறான்.

எதரர் : ஒரே ஒரு நிமிஷம்! (ஸ்லிக் கதவை மூடுகிறான்) நீ ஜன்னல் வழியாக ஓடிப்போ.

ஜெசிகா : உங்களை விட்டுச்செல்ல எனக்கு இஷ்டமில்லை.

எதரர் : நீ இங்கு இருந்தால் அவன் நிச்சயம் சுடுவான். உனக்கு எதிரில், தன்னை வீரனாகக் காட்டிக் கொள்ளத் தவற மாட்டான் – போ... ஓடிவிடு. (அவள் ஜன்னல் வழியாக வெளியேறுகிறாள். போர்வைத் துணி மீண்டும் ஜன்னலை மறைக்கிறது) அவனை வரச்சொல்.

## காட்சி – 2

உய்கோ, எதரர்.

உய்கோ வருகிறான். எதரர் கதவுவரை சென்று, உய்கோ தன் மேசைக்குச் செல்லும்வரை தொடர்ந்து அவனுடன் வருகிறான்; பேசும்போது அவன் அருகிலேயே நிற்கிறான்; அவன் செய்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருக்கிறான், துப்பாக்கியை எடுக்க பைக்குள் கையை விட்டால் அவன் கையைப் பிடித்து நிறுத்தக்கூடிய தயார் நிலையில் இருக்கிறான்.

எதரர் : என்ன? இரவு நீ நன்றாக தூங்கினாயா?

உய்கோ : ஏதோ சுமாராக.

எதரர் : இறுதியான முடிவுக்கு வந்துவிட்டாயா?

உய்கோ : (அதிர்ச்சியுடன்) முடிவா, எதைப்பற்றி?

எதரர் : நேற்று இரவு என்னிடம் சொன்னாயே – என் முடிவை மாற்றச் செய்யும் முயற்சியில் நீ தோல்விகண்டால், கட்சியை விட்டு விலகப்போவதாகச் சொன்னாயே–அதைக் கேட்கிறேன்.

உய்கோ : நான் எப்போதுமே முடிவு எடுத்தால் எடுத்ததுதான்.

எதரர் : சரி... அதையும்தான் இப்போது சற்று நேரத்தில் பார்க்கப் போகிறோமே! அதுவரை நம் வேலையைக் கவனிப்போமா? நீ



உட்கார்ந்துகொள். (உய்கோ, தான் பணிபுரியும் மேசை முன் அமர்ந்துகொள்கிறான்). எந்த இடத்தில் விட்டோம்?

உய்கோ : (தன் நோட்டுக் குறிப்புக்களிலிருந்து படிக்கிறான்) தொழில் வாரியாக நடந்த புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்படி, விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1906இல் இருந்த எண்பது லக்ஷத்து எழுநூற்று எழுபத்தோராயித்திலிருந்து குறைந்து...

எதரர் : உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நேற்றுக் குண்டு வீசியது ஒரு பெண்.

உய்கோ : ஒரு பெண்ணா?

எதரர் : தோட்டத்தில் அவளுடைய கால் பதிந்த தடங்களை நம் ஸ்லிக் கண்டுபிடித்துவிட்டான். உனக்கு, அவளைத் தெரியுமா?

உய்கோ : எனக்கு எப்படித் தெரியமுடியும்? (மௌனம்)

எதரர் : உனக்கு உண்மையிலேயே இது ஆச்சரியமளிப்பதாகத் தோன்றவில்லை. உனக்கு என்ன ஆயிற்று?

உய்கோ : எனக்கு உடம்பு சரியில்லை

எதரர் : இன்று அரை நாள் லீவு எடுத்துக் கொள்கிறாயா?

உய்கோ : வேண்டாம் வேலை செய்யலாம்.

எதரர் : அந்த வாக்கியத்ததை மீண்டும் படி, பார்க்கலாம்... (உய்கோ தன் குறிப்புகளை எடுத்து மீண்டும் படிக்கிறான்)

உய்கோ : தொழில் வாரியாக நடந்த புள்ளிவிவரக் கணக்கெடுப்பின் படி..." (எதரர் சிரிக்கிறான். உய்கோ திடீரென்று தலை நிமிர்ந்து பார்க்கிறான்)

எதரர் : அவளுக்கு ஏன் குறி தவறி விட்டது தெரியுமா? அவள் கண்களை மூடிக்கொண்டு குண்டை வீசியிருக்கிறாள் என்று நான் பந்தயம் கட்டத் தயார்.

உய்கோ : (ஆர்வமின்றி) ஏன் அப்படி?

எதரர் : அதிக சப்தம் தான் காரணம். சத்தம் காதில் விழக்கூடாது என்பதற்காகக் கண்களை மூடிக் கொள்வார்கள் பெண்கள்.



ஏன் இப்படி என்பதற்கு நீ என்ன விளக்கம் வேண்டுமானாலும் கொடுத்துக்கொள். ஆனால் ஒன்று நிச்சயம், பெண்களுக்கு சத்தத்தைக் கேட்க பயம், எலிகளைப் போல! அது மட்டும் இல்லையென்றால், பெண்களைப் போன்ற மிகச்சிறந்த கொலையாளிகள் வேறு யாரும் இருக்க முடியாது. நாம் ஆண்கள்; வித்தியாசமானவர்கள்; கொண்ட கொள்கைக்காக ஏதோ ஒரு மூன்றாம் மனிதனை நோக்கி சுடுவது என்பது நமக்கு அந்த அளவுக்குச் சுலபமில்லை, காரணம் நம் கருத்துக்களை நாமே உருவாக்கிக் கொள்கிறோம், ஆகையால் நாம் நினைப்பது மட்டுமே சரி என்று நம்மால் என்றுமே திட்டவட்டமாக கூற முடியாது. உன்னையேதான் எடுத்துக் கொள்வோமே! நீ நினைப்பது தான் சரி என்று உன்னால் திட்டவட்டமாகக் கூற முடியுமா?

உய்கோ : நிச்சயமாக.

எதரர் : அது எப்படி இருந்தாலும் உன்னால் ஒரு கொலையை செய்ய முடியாது. அந்தந்த தொழிலுக்கு ஒரு தனித் தகுதி வேண்டும்.

உய்கோ : கட்சி ஆணையிட்டால், யார் வேண்டுமானாலும் கொலையைச் செய்ய முடியும்.

எதரர் : கட்சி உன்னை அந்தரத்தில் ஒரு கயிற்றின் மேல் நடனமாடச் சொன்னால் உன்னால் முடியும் என்றா நினைக்கிறாய்? ஒருவன் கொலையாளியாகவே பிறக்க வேண்டும், நீ அதிகம் சிந்தனை செய்பவன். உன்னால் முடியாது.

உய்கோ : நான் தீர்மானம் செய்து விட்டால் என்னால் முடியும்.

எதரர் : அரசியலில் நான் உன் கருத்தை ஏற்றுக் கொள்ள வில்லை என்ற காரணத்திற்காக கொஞ்சமும் சலன மின்றி என் நெற்றியில் இரு கண்களுக்குமிடையே, குறி வைத்து உன்னால் சுடமுடியுமா?

உய்கோ : முடியும்; அப்படி நான் தீர்மானித்திருந்தால், அல்லது அப்படி ஒரு ஆணையைக் கட்சி எனக்கு தந்திருந்தால்.

எதரர் : எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. (உய்கோ தன் கையை பைக்குள் நுழைக்க முயல்கிறான்.



ஆனால் எதரர் அவன் கையைப் பற்றி மெல்ல மேசைமட்டத்திற்கு சற்றே மேலே தெரியும்படி உயர்த்துகிறார்). இப்போது இந்தக் கையில் ஒரு துப்பாக்கி இருக்கிறது. உன் விரல்கள் அதன் விசையை அழுத்தக் கூடிய நிலையில் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம்...

உய்கோ : என் கையை விடு.

எதரர் : (கையை விடாமல்) இப்போது நான் இருக்கும் நிலையிலேயே நான் உன் எதிரே நின்றுக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள், நீ என்னைக் குறி பார்த்து...

உய்கோ : கையை விடு, வேலையைக் கவனிப்போம்.

எதரர் : நீ என்னைப் பார்க்கிறாய். பின் சுடப் போகும் நேரத்தில் உனக்குள் ஒரு சிந்தனையோட்டம்; "ஒருகால் அவன் சொல்வது தான் சரியோ?" என்று சந்தேகம் – என்ன புரிகிறதா?

உய்கோ : எனக்கு எந்தச் சந்தேகமும் வராது, அவனைச் சுடுவதைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் வராது.

எதரர் : இல்லை, உனக்கு அத்தகைய சிந்தனை வரும். அறிவு ஜீவி என்றால் அவனால் சிந்திக்காமல் இருக்க முடியாது. துப்பாக்கியின் விசையை அழுத்தும் முன்பாக, நீ செய்யப் போகும் செயலின் எல்லா விளைவுகளும் உன் கண்முன்னே தோன்றும். என் வாழ்நாள் சாதனைகள் அனைத்தும் மண்ணோடு மண்ணாகப் போவதையும் ஒரு கொள்கை தவிடு பொடியாவதையும், என் இடத்தை நிரப்பக்கூடியவர் வேறு யாரும் இல்லாததையும், நம் கட்சி என்றென்றும் ஆட்சிக்கு வரமுடியாத நிலைக்குத் தள்ளப்படுவதையும் உணர்ந்து விடுவாய்.

உய்கோ : இல்லை, நான் அதைப்பற்றியெல்லாம் சிந்திக்க மாட்டேன் என்று தான் சொல்கிறேனே.

எதரர் : உன்னால் சிந்திக்காமல் இருக்க முடியாது. அது ஒரு வழியில் மேல், கொலைகாரர்கள் வாழ்க்கை என்றால்

என்னவென்று தெரியாதவர்கள். பிறர் சாவைக் கண்டு அஞ்சுபவர்களே மேல், ஏனெனில் அவர்களுக்கு வாழத் தெரிந்திருக்கிறது என்று பொருள்.

உய்கோ : நான் வாழப் பிறந்தவனில்லை! வாழ்க்கை என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கில்லை. நான் இவ்வுலகில் உபரியாக, அதிகப்படியாக இருக்கிறேன். எனக்கு இங்கு ஓர் இடமுமில்லை. நான் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறேன். யாருக்கும் என்னை பிடிக்காது; யாரும் என்னை நம்புவதும் இல்லை.

எதரர் : நான் உன்னை நம்புகிறேன்.

உய்கோ : நீயா?

எதரர் : ஆமாம் நிச்சயமாக. தற்போது நீ இருக்கும் சிறுபிள்ளைப் பருவத்திலிருந்து மனித நிலைக்கு முதிர்ச்சியடைவதற்கு உனக்கு சிறிது கஷ்டமாக இருக்கிறது. யாரேனும் இந்நிலை மாற்றத்திற்கு கொஞ்சம் உதவி செய்தால் போதும்; நீ ஆகிவிடுவாய் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மனிதனாக அவர்களுடைய குண்டுகளுக்கும் வெடிகளுக்கும் நான் தப்பிவிட்டால், நான் உன்னை என்னுடன் வைத்துக் கொண்டு அதற்கான உதவி செய்வேன்.

உய்கோ : இதை ஏன் என்னிடம் சொல்கிறாய்? அதுவும் இன்று?

எதரர் : (அவனை பிடியிலிருந்து விடுவித்து) ஒரு தேர்ந்த கொலை காரனாக இருந்தாலொழிய, தைரியசாலியான ஒரு மனிதனைத் தீர்த்துக்கட்ட முடியாது என்பதை உனக்கு நிரூபிப்பதற்காகத் தான்.

உய்கோ : நான் அவ்வாறு முடிவு செய்திருந்தால், அதை நிறைவேற்ற என்னால் முடிய வேண்டும். (தனக்குத் தானே பொறுமை இழந்த ஆற்றாமையுடன்) என்னால் முடிய வேண்டும்.

எதரர் : நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உன்னால் என்னைச் சுட முடியுமா? (ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர்.



எதரர் மேசையிடமிருந்து சற்றே விலகி ஓரடி பின்னால் வைக்கிறான்) நிஜக் கொலைகாரர்கள், தம் சிந்தனையில் ஏதாவது ஒடிக் கொண்டிருக்கிறதா என்று சந்தேகப்படக் கூட மாட்டார்கள். ஆனால் உனக்கு அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். நீ என்னைக் குறி பார்த்துக்கொண்டிருப்பதை நான் பார்த்துவிட்டால், அப்போது என் மனத்தில் எழக்கூடிய எண்ணங்களை உன்னால் தாங்கிக் கொள்ள இயலுமா? (சிறிது நேரம் எதரர் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான்) உனக்குக் காபி வேண்டுமா? (அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை) இதோ தயாராக இருக்கிறது. உனக்கு ஒரு கப் தருகிறேன். (உய்கோவிற்கு தன் முதுகைக் காட்டி திரும்பி, ஒரு கப்பில் காபியை நிரப்புகிறான். உய்கோ எழுந்து துப்பாக்கி இருக்கும் பையில் கையை விடுகிறான். அவனுள் ஒரு சிறு மனப்போராட்டம் நடப்பதைக் காண முடிகிறது. சற்று நேரத்துக்குப் பின் எதரர் திரும்பி ஒரு கப் நிறைய காப்பியை எடுத்துக் கொண்டு நிதானமாக உய்கோவிடம் கொண்டு வந்து நீட்டுகிறான்). சரி இப்போது உன் துப்பாக்கியை என்னிடம் கொடுத்து விடு... எடு... நான் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன். அது உனக்கே தெரியும்; ஆனால் நீ அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை!

(உய்கோவின் பையில் தம் கையை விட்டு அதிலிருந்து துப்பாக்கியை எதரர் வெளியே எடுக்கிறான்). இது ஒரு விளையாட்டுத் துப்பாக்கி! சில அடிகள் எடுத்து வைத்துத் தன் மேசைமேல் அதை எறிகிறான்.)

உய்கோ : நான் உன்னை வெறுக்கிறேன். (எதரர் அவனிடம் திரும்பி வருகிறான்)

எதரர் : இல்லை. நீ என்ன வெறுக்கவில்லை. நீ என்னை வெறுப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

உய்கோ : நீ என்னை ஒரு கோழை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்.

மீண்டும் ஒரு விடுதலை 133

என்னவென்று தெரியாதவர்கள். பிறர் சாவைக் கண்டு அஞ்சுபவர்களே மேல், ஏனெனில் அவர்களுக்கு வாழத் தெரிந்திருக்கிறது என்று பொருள்.

உய்கோ : நான் வாழப் பிறந்தவனில்லை! வாழ்க்கை என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கில்லை. நான் இவ்வுலகில் உபரியாக, அதிகப்படியாக இருக்கிறேன். எனக்கு இங்கு ஓர் இடமுமில்லை. நான் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறேன். யாருக்கும் என்னை பிடிக்காது; யாரும் என்னை நம்புவதும் இல்லை.

எதரர் : நான் உன்னை நம்புகிறேன்.

உய்கோ : நீயா?

எதரர் : ஆமாம் நிச்சயமாக. தற்போது நீ இருக்கும் சிறுபிள்ளைப் பருவத்திலிருந்து மனித நிலைக்கு முதிர்ச்சியடைவதற்கு உனக்கு சிறிது கஷ்டமாக இருக்கிறது. யாரேனும் இந்நிலை மாற்றத்திற்கு கொஞ்சம் உதவி செய்தால் போதும்; நீ ஆகிவிடுவாய் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மனிதனாக அவர்களுடைய குண்டுகளுக்கும் வெடிகளுக்கும் நான் தப்பிவிட்டால், நான் உன்னை என்னுடன் வைத்துக் கொண்டு அதற்கான உதவி செய்வேன்.

உய்கோ : இதை ஏன் என்னிடம் சொல்கிறாய்? அதுவும் இன்று?

எதரர் : (அவனை பிடியிலிருந்து விடுவித்து) ஒரு தேர்ந்த கொலை காரனாக இருந்தாலொழிய, தைரியசாலியான ஒரு மனிதனைத் தீர்த்துக்கட்ட முடியாது என்பதை உனக்கு நிரூபிப்பதற்காகத் தான்.

உய்கோ : நான் அவ்வாறு முடிவு செய்திருந்தால், அதை நிறைவேற்ற என்னால் முடிய வேண்டும். (தனக்குத் தானே பொறுமை இழந்த ஆற்றாமையுடன்) என்னால் முடிய வேண்டும்.

எதரர் : நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உன்னால் என்னைச் சுட முடியுமா? (ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர்.

134 மீண்டும் ஒரு விடுதலை

எதரர் மேசையிடமிருந்து சற்றே விலகி ஓரடி பின்னால் வைக்கிறான்) நிஜக் கொலைகாரர்கள், தம் சிந்தனையில் ஏதாவது ஒடிக் கொண்டிருக்கிறதா என்று சந்தேகப்படக் கூட மாட்டார்கள். ஆனால் உனக்கு அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். நீ என்னைக் குறி பார்த்துக்கொண்டிருப்பதை நான் பார்த்துவிட்டால், அப்போது என் மனத்தில் எழக்கூடிய எண்ணங்களை உன்னால் தாங்கிக் கொள்ள இயலுமா? (சிறிது நேரம் எதரர் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான்) உனக்குக் காபி வேண்டுமா? (அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை) இதோ தயாராக இருக்கிறது. உனக்கு ஒரு கப் தருகிறேன். (உய்கோவிற்கு தன் முதுகைக் காட்டி திரும்பி, ஒரு கப்பில் காபியை நிரப்புகிறான். உய்கோ எழுந்து துப்பாக்கி இருக்கும் பையில் கையை விடுகிறான். அவனுள் ஒரு சிறு மனப்போராட்டம் நடப்பதைக் காண முடிகிறது. சற்று நேரத்துக்குப் பின் எதரர் திரும்பி ஒரு கப் நிறைய காப்பியை எடுத்துக் கொண்டு நிதானமாக உய்கோவிடம் கொண்டு வந்து நீட்டுகிறான்). சரி இப்போது உன் துப்பாக்கியை என்னிடம் கொடுத்து விடு... எடு... நான் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன். அது உனக்கே தெரியும்; ஆனால் நீ அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை!

(உய்கோவின் பையில் தம் கையை விட்டு அதிலிருந்து துப்பாக்கியை எதரர் வெளியே எடுக்கிறான்). இது ஒரு விளையாட்டுத் துப்பாக்கி! சில அடிகள் எடுத்து வைத்துத் தன் மேசைமேல் அதை எறிகிறான்.)

உய்கோ : நான் உன்னை வெறுக்கிறேன். (எதரர் அவனிடம் திரும்பி வருகிறான்)

எதரர் : இல்லை. நீ என்ன வெறுக்கவில்லை. நீ என்னை வெறுப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

உய்கோ : நீ என்னை ஒரு கோழை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்.

என்னவென்று தெரியாதவர்கள். பிறர் சாவைக் கண்டு அஞ்சுபவர்களே மேல், ஏனெனில் அவர்களுக்கு வாழத் தெரிந்திருக்கிறது என்று பொருள்.

உய்கோ : நான் வாழப் பிறந்தவனில்லை! வாழ்க்கை என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கில்லை. நான் இவ்வுலகில் உபரியாக, அதிகப்படியாக இருக்கிறேன். எனக்கு இங்கு ஓர் இடமுமில்லை. நான் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறேன். யாருக்கும் என்னை பிடிக்காது; யாரும் என்னை நம்புவதும் இல்லை.

எதரர் : நான் உன்னை நம்புகிறேன்.

உய்கோ : நீயா?

எதரர் : ஆமாம் நிச்சயமாக. தற்போது நீ இருக்கும் சிறுபிள்ளைப் பருவத்திலிருந்து மனித நிலைக்கு முதிர்ச்சியடைவதற்கு உனக்கு சிறிது கஷ்டமாக இருக்கிறது. யாரேனும் இந்நிலை மாற்றத்திற்கு கொஞ்சம் உதவி செய்தால் போதும்; நீ ஆகிவிடுவாய் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மனிதனாக அவர்களுடைய குண்டுகளுக்கும் வெடிகளுக்கும் நான் தப்பிவிட்டால், நான் உன்னை என்னுடன் வைத்துக் கொண்டு அதற்கான உதவி செய்வேன்.

உய்கோ : இதை ஏன் என்னிடம் சொல்கிறாய்? அதுவும் இன்று?

எதரர் : (அவனை பிடியிலிருந்து விடுவித்து) ஒரு தேர்ந்த கொலை காரனாக இருந்தாலொழிய, தைரியசாலியான ஒரு மனிதனைத் தீர்த்துக்கட்ட முடியாது என்பதை உனக்கு நிரூபிப்பதற்காகத் தான்.

உய்கோ : நான் அவ்வாறு முடிவு செய்திருந்தால், அதை நிறைவேற்ற என்னால் முடிய வேண்டும். (தனக்குத் தானே பொறுமை இழந்த ஆற்றாமையுடன்) என்னால் முடிய வேண்டும்.

எதரர் : நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உன்னால் என்னைச் சுட முடியுமா? (ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர்.



எதரர் மேசையிடமிருந்து சற்றே விலகி ஓரடி பின்னால் வைக்கிறான்) நிஜக் கொலைகாரர்கள், தம் சிந்தனையில் ஏதாவது ஓடிக் கொண்டிருக்கிறதா என்று சந்தேகப்படக் கூட மாட்டார்கள். ஆனால் உனக்கு அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். நீ என்னைக் குறி பார்த்துக்கொண்டிருப்பதை நான் பார்த்துவிட்டால், அப்போது என் மனத்தில் எழக்கூடிய எண்ணங்களை உன்னால் தாங்கிக் கொள்ள இயலுமா? (சிறிது நேரம் எதரர் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான்) உனக்குக் காபி வேண்டுமா? (அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை) இதோ தயாராக இருக்கிறது. உனக்கு ஒரு கப் தருகிறேன். (உய்கோவிற்கு தன் முதுகைக் காட்டி திரும்பி, ஒரு கப்பில் காபியை நிரப்புகிறான். உய்கோ எழுந்து துப்பாக்கி இருக்கும் பையில் கையை விடுகிறான். அவனுள் ஒரு சிறு மனப்போராட்டம் நடப்பதைக் காண முடிகிறது. சற்று நேரத்துக்குப் பின் எதரர் திரும்பி ஒரு கப் நிறைய காப்பியை எடுத்துக் கொண்டு நிதானமாக உய்கோவிடம் கொண்டு வந்து நீட்டுகிறான்). சரி இப்போது உன் துப்பாக்கியை என்னிடம் கொடுத்து விடு... எடு... நான் உனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன். அது உனக்கே தெரியும்; ஆனால் நீ அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை!

(உய்கோவின் பையில் தம் கையை விட்டு அதிலிருந்து துப்பாக்கியை எதரர் வெளியே எடுக்கிறான்). இது ஒரு விளையாட்டுத் துப்பாக்கி! சில அடிகள் எடுத்து வைத்துத் தன் மேசைமேல் அதை எறிகிறான்.)

உய்கோ : நான் உன்னை வெறுக்கிறேன். (எதரர் அவனிடம் திரும்பி வருகிறான்)

எதரர் : இல்லை. நீ என்ன வெறுக்கவில்லை. நீ என்னை வெறுப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

உய்கோ : நீ என்னை ஒரு கோழை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்.



எதரர் : நான் ஏன் அப்படி நினைக்க வேண்டும்?

உய்கோ : துப்பாக்கி விசையில் என் விரலைக் கூட வைத்து விட்டேன்!

எதரர் : சரி.

உய்கோ : பிறகு நான்... வந்து... (இயலாமையை வெளிப்படுத்தும் ஒரு அங்க அசைவு)

எதரர் : ஆமாம்! நான்தான் சொன்னேனே! எல்லோரும் நினைப்பது போல் அது ஒன்றும் அவ்வளவு எளிதில்லை.

உய்கோ : நீ வேண்டுமென்றேதான் என்பக்கம் முதுகைக் காட்டித் திரும்பிக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நானும்...

எதரர் : ஏதோ ஒன்று... எது எப்படியிருந்தாலும்...

உய்கோ : நான் ஒரு துரோகி இல்லை.

எதரர் : துரோகி என்று யார் சொன்னது? துரோகம் செய்வதற்குக் கூட ஒரு தனி தொழில்திறன் வேண்டும்!

உய்கோ : துரோகி என்றுதான் அவர்கள் நினைப்பார்கள். காரணம், அவர்கள் செய்யச் சொன்னதை நான் செய்யவில்லையே?

எதரர் : அவர்கள்? யார் அந்த அவர்கள்? (மௌனம்) லூயிதான் உன்னை இங்கு அனுப்பியதா? (மௌனம்) உனக்குச் சொல்ல விருப்பமில்லை. புரிகிறது. (சற்றுநேரத்திற்குப் பின்) நான் சொல்வதைக் கேள். உன் தலைவிதி என்னுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. நேற்றிலிருந்து நான் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலேயும் என் கையே மேலோங்கி இருக்கிறது. அடுத்து நம் இருவரின் உயிரையும் சேர்த்து காப்பாற்ற முயலப் போகிறேன், நாளை நான் நகர்ப்புறம் சென்று லூயியைப் பார்த்துப் பேசப் போகிறேன். அவன் விடாக்கண்டன்தான்! ஆனால் நானும் அவனுக்குச் சளைத்தவனில்லை. ஆக உன் நண்பர்கள் சம்பந்தப் பட்டவரை இந்த விஷயத்தைச் சரி செய்து விடலாம். ஆனால்



மிகக் கடினமானது என்னவென்றால் உன் மனச்சாட்சியுடன் நீ சமரசம் செய்துகொள்வதுதான்.

உய்கோ : கடினமா? அது மிக விரைவில் முடிந்துவிடும். என்னிடம் துப்பாக்கியைத் தந்தால் போதும்.

எதரர் : மாட்டேன்.

உய்கோ : என்னையே நான் சுட்டுக் கொண்டால் அது பற்றி உனக்கு என்ன? நான் தான் உன் விரோதி ஆயிற்றே.

எதரர் : முதலாவதாக நீ என் விரோதியில்லை. மேலும் நீ எனக்கு உதவியாக இருக்க முடியும்.

உய்கோ : என் அத்தியாயம் முடிந்துவிட்டது என்பது உனக்கு நன்றாகத் தெரியும்.

எதரர் : எத்தனை கதைகள்! நீ செயலாற்றத் தகுதி உள்ளவன்தான் என்று உனக்கு நீயே நிரூபித்துக்கொள்ள விரும்பினாய். அதற்காக மிகவும் கடினமான வழிகளைத் தேர்ந்தெடுத்தாய். சொர்க்கத்திற்குப்போகத் தம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள விரும்பும் பக்தர்களைப் போல. இது உன் வயதுக்கேற்ற செயல்தான். ஆனால் நீ தோற்றுவிட்டாய். சரி, அப்புறம்? நிரூபிப்பதற்கு எதுவும் இல்லை.

உய்கோ : நான் எதற்கும் தகுதியில்லாதவன்.

எதரர் : உனக்கு எழுதும் ஆற்றல் இருக்கிறது.

உய்கோ : ...ம். எழுதுவதற்கு: வார்த்தைகளை; வெறும் வார்த்தைகளைத் தான்.

எதரர் : இருந்தால் என்ன? வெற்றியடைவதுதான் முக்கியம். மோசமான கொலைகாரனை விட ஒரு நல்ல பத்திரிகை ஆசிரியன் மேல்.

உய்கோ : (தயங்கியபடி ஆனால் ஒருவகைத் தன்னம்பிக்கையுடன்) எதரர் நீ என் வயதில் இருந்தபோது. . .

எதரர் : இருந்தபோது?

உய்கோ : என் நிலைமையில் இருந்தால் என்ன செய்திருப்பாய்?

எதரர் : நானா? நான் சுட்டிருப்பேன். அதைவிட மேலாகவும் நான் ஏதேனும் செய்திருக்கக்கூடும். மேலும். நாம் இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களில்லை.

உய்கோ : நான் உங்கள் இனத்தைச் சேர்ந்தவனாக இருக்க விரும்புகிறேன். தன் மனத்துக்குப் பிடித்த நிலையில் இருப்பதைப் போல மகிழ்ச்சி வேறு எதுவும் கிடையாது.

எதரர் : ஓகோ! (லேசாகச் சிரிக்கிறான்) பிறகு ஒரு நாள் உனக்கு என்னைப் பற்றி சொல்கிறேன்.

உய்கோ : ஒரு நாளா? (சிறிது நேரத்துக்குப் பின்) எதரர்! நான் என் முயற்சியில் தோற்றுவிட்டேன். இனி உன்னை ஒருநாளும் என்னால் சுட முடியாது என்று இப்போது எனக்குத் தெரிகிறது. காரணம்... வந்து... காரணம் எனக்கு உன்மேல் ஓர் அபிமானம் வந்துவிட்டது. ஆனால், இதன் காரணமாகத் தப்புக் கணக்கு போட்டுவிட வேண்டாம். நேற்று மாலை நாம் விவாதித்த விஷயங்களில் உன் கருத்துக்களை என்னால் என்றும் ஒப்புக்கொள்ள முடியாது. நான் உன்பக்கம் ஒரு நாளும் இருக்கப் போவதில்லை. நீ எனக்காகப் பரிந்து பேசுவதையும் நான் விரும்பவில்லை. நாளையும் வேண்டாம், வேறு எந்த ஒரு நாளும் வேண்டாம்.

எதரர் : சரி, உன் இஷ்டம்.

உய்கோ : இப்போது நான் இங்கிருந்து செல்ல அனுமதி வேண்டும். இந்த விஷயம் பற்றி முழுவதுமாகச் சிந்திக்க விரும்புகிறேன்.

எதரர் : என்னை மீண்டும் வந்து சந்திக்கும் முன்பாக, எந்த அசட்டுச் செயலும் செய்துகொண்டு விடமாட்டாயே? எனக்கு இந்த வாக்குறுதி அளிக்கிறாயா?

உய்கோ : சரி, உன் விருப்பப்படியே அளிக்கிறேன்.

எதரர் : சென்று வா. கொஞ்சம் காற்று வாங்கிவிட்டு வா. உன்னால் முடியும்போது உடனே திரும்பி வரலாம். நீ இன்னும் என்னுடைய செயலாளர் என்பதை மறக்காதே. நீ என்னை வீழ்த்தாதவரை, அல்லது நானாக உன்னை வேண்டாம் என்று சொல்லும்வரை நீ எனக்குத்தான் பணியாற்ற



வேண்டும்.

(உய்கோ வெளியேறுகிறான்)

எதரர் : (கதவுவரை சென்று) ஸ்லிக்!

ஸ்லிக் : என்ன?

எதரர் : இவனுக்கு ஏதோ சில மன உளைச்சல்கள். தூர இருந்து கவனித்துக்கொள். தேவைப்பட்டால், அவன் தற்கொலை செய்து கொள்ளாதவாறு பார்த்துக்கொள். ஆனால், பலாத்காரம் வேண்டாம். சற்று நேரத்தில் அவன் மீண்டும் இங்கு திரும்பிவர விரும்பினால், 'என்னிடம் அறிவிக்க வேண்டும்' என்று சொல்லி அவனை வாசலில் தடுத்து நிறுத்த வேண்டாம். அவன் இஷ்டப்படி போகட்டும், வரட்டும். முக்கியமாக அவனுக்கு எரிச்சல் மூட்டக்கூடாது.

(கதவை மீண்டும் சாத்துகிறான். காபி அடுப்பு வைத்திருக்கும் மேசைக்குத் திரும்பிவந்து தனக்கு ஒரு கப் காப்பி ஊற்றிக் கொள்கிறான். ழெசிகா ஜன்னலை மூடி மறைத்திருக்கும் திரைச்சீலையை விலக்கிக்கொண்டு வருகிறாள்)

## காட்சி — 3

ழெசிகா, எதரர்.

எதரர் : சனியனே! மறுபடியும் நீயா? என்ன வேண்டும்?

ழெசிகா : ஜன்னலுக்குப் பின்புறம் கட்டைச்சுவரில் உட்கார்ந்து நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தேன்.

எதரர் : ஓகோ!

ழெசிகா : எனக்குப் பயமாக இருந்தது.

எதரர் : அப்படியானால் போய்த்தொலைய வேண்டியதுதானே!

ழெசிகா : என்னால் உங்களை விட்டுவிட்டுப் போக முடியவில்லை.

எதரர் : நீ அப்படியொன்றும் பெரிய உதவி செய்திருக்க முடியாது.

கொஞ்சிக் கொண்டிருப்பதற்கு எனக்கு நேரமில்லை. நானாக உன்னை இந்தச் சோபாவின் மேல் தள்ளிப் புரட்டி எடுத்துவிட்டுப் பின் விட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறாயா?

ழெசிகா : உங்கள் இஷ்டம்!

எதரர் : இருப்பினும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே... வந்து...

ழெசிகா : எனக்கு எதுவும் தெரியாது. நான் கன்னிப்பெண்ணும் இல்லை, மங்கையுமில்லை. நான் வாழ்ந்ததே ஒரு கனவில். அவர் என்னை கட்டித் தழுவியபோதெல்லாம் சிரிப்புத்தான் வந்தது. இதோ இப்போது நான் உங்கள் முன் நிற்கிறேன். என்னுள் ஏதோ ஒன்று விழித்தெழுந்ததுபோல் தோன்றுகிறது. அதன் விடியலை உணர்கிறேன். நீங்கள் நிஜம், எலும்பாலும், தசையாலும் ஆன நிஜமான ஆண்பிள்ளை. எனக்கு உங்களைக் காண நிஜமாகவே பயமாக இருக்கிறது! நான் உங்களை நிஜமாகவே விரும்புவதாக உணர்கிறேன். என்னை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் நான் உங்கள்மேல் குற்றம் சொல்ல மாட்டேன்.

எதரர் : அவன் கட்டியணைக்கும்போது உனக்குச் சிரிப்புத்தான் வருகிறதா?... ம்... (ழெசிகா சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொள்கிறாள்)

ழெசிகா : ஆமாம்.

எதரர் : அப்படியென்றால் நீ உணர்ச்சியற்ற பெண்ணா?

ழெசிகா : அப்படித்தான் சொல்கிறார்கள்.

எதரர் : நீ அதுபற்றி என்ன நினைக்கிறாய்?

ழெசிகா : தெரியவில்லை.

எதரர் : அதையும்தான் பார்த்து விடுவோமே! (அவன் அவளைக் கட்டியணைக்கிறான்), என்ன?

ழெசிகா : இப்போது எனக்குச் சிரிப்பு வரவில்லை.

(கதவு திறக்கிறது. உய்கோ வருகிறான்)



## காட்சி – 4

எதரர், உய்கோ, ழெசிகா.

உய்கோ : இதுதான் விஷயமா?

எதரர் : உய்கோ!

உய்கோ : சரிதான். (சற்று நேரத்துக்குப்பின்) ஓகோ! அதனால்தான் என்னை உயிரோடு விட்டுவைத்திருந்தாயா? 'ஏன் இவன் நம்மைத் தீர்த்துக்கட்டவில்லை, அல்லது ஆட்களைக் கொண்டு அடித்து விரட்டவில்லை?' என்று பார்த்தேன். இப்போது எல்லாம் புரிகிறது. எல்லாம் என் மனைவிக் காகத்தானா?

ழெசிகா : நான் சொல்வதை கேளுங்கள்.

உய்கோ : சரிதான், ழெசிகா, பரவாயில்லை – அதோடு விட்டுவிடு. நான் உன்னைக் குற்றம் சொல்லவில்லை—எனக்கு இதில் பொறாமையும் இல்லை; நாம் ஒருவரை ஒருவர் நேசித்ததில்லை. ஆனால் இவன், இவனுடைய வலையில் நான் விழ இருந்தேன். 'நான் உனக்கு உதவி செய்கிறேன், நான் உன்னை ஒரு மனிதன் ஆக்குகிறேன்' என்று என்னவெல்லாம் சொல்லியிருக்கிறான்! நான் ஒரு மடையன்! இவன் என்னை நன்றாக முட்டாளாக்கி விட்டான்.

எதரர் : உய்கோ, நான் உனக்கு நிச்சயமாக வாக்குத் தருகிறேன். சத்தியமாக வந்து...

உய்கோ : நீ எந்தவித மன்னிப்பும் கேட்கத் தேவையில்லை. மாறாக நானே உனக்கு நன்றி சொல்லவேண்டும். முதல்முறையாக உன்னைத் தடுமாறும்படி செய்துவிட்ட மகிழ்ச்சி எனக்கு. அப்புறம்... வந்து... (ஒரே பாய்ச்சலாக மேசைக்குத் தாவி, அங்கிருந்து துப்பாக்கியை எடுத்து, எதரரை குறிவைக்கிறான்) எனக்கு விடுதலையும் அளித்துவிட்டாய்.

ழெசிகா : (அலறியபடி) உய்கோ...



உய்கோ : எதரர், இதோ பார். நான் உன் கண்களை நிமிர்ந்து நோக்குகிறேன். இதோ குறிபார்க்கிறேன். என் கைகள் இப்போது நடுங்கவில்லை. உன் தலைக்குள் என்ன சிந்தனைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை.

எதரர் : ஏய்! இதோ பார். கொஞ்சம் பொறு. அவசரப்படாதே. முட்டாள்தனமாக ஒன்றும் செய்துவைக்காதே. அதுவும் ஒரு பெண்ணிற்காக!

(உய்கோ மூன்றுமுறைச் சுடுகிறான். ழெசிகா அலறுகிறாள். ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் உள்ளே பாய்ந்து வருகின்றனர்)

எதரர் : முட்டாள்! எல்லாவற்றைவும் கெடுத்துவிட்டாயே!

ஸ்லிக் : பேமானிப்பயலே! (தன் துப்பாக்கியை எடுக்கிறான்)

எதரர் : இவனுக்குத் தீங்கொன்றும் செய்துவிடாதீர்கள். (ஒரு நாற்காலியில் விழுகிறான்) பொறாமையினால் சுட்டு விட்டான்.

ஸ்லிக் : அப்படியென்றால்?

எதரர் : நான் இவளைக் கூடியிருந்தேன். (சற்று நேரத்துக்குப் பின்) சே! வெட்கக்கேடு!

(உயிர் துறக்கிறார்)

(திரை)



# அரங்கமைப்பு ஏழு

ஒல்காவின் அறை

## காட்சி – 1

முதலில், இருட்டில் ஒல்கா, உய்கோவின் குரல்கள் மட்டும் கேட்கின்றன. சிறிதுசிறிதாக ஒளி அதிகமாகிக் கொண்டு வருகிறது.

ஒல்கா : அதுதான் உண்மையா? நீ அவனைச் சுட்டது நிஜமாகவே ழெசிகாவுக்காகத்தானா?

உய்கோ : நான் அவனைச் சுட்டுக்கொன்றதற்கு காரணம், நான் கதவைத் திறந்ததுதான். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அந்தக் கதவை நான் திறக்காமலே இருந்திருந்தால். ஒன்றும் நடந்திராது. கதவைத் திறந்தேன்; அவனை அங்கே கண்டேன். அவன் அணைப்பில் ழெசிகா. அவன் முகவாய்க்கட்டையில் உதட்டுச்சாயம். இது அற்பவிஷயமாக இருக்கலாம். நான் பல நாட்களாகச் சோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்தச் சோகத்திலிருந்து விடுபடுவதற் காகத்தான் நான் அவனைச் சுட்டேன்.

ஒல்கா : உனக்கு அவன்மேல் பொறாமையில்லை?

உய்கோ : பொறாமை? இருந்திருக்கலாம். ஆனால் அது ழெசிகாவின் பொருட்டன்று.

ஒல்கா : இதோ, என்னைப் பார். இப்போது நான் உன்னைக் கேட்கப் போகும் கேள்வி மிகவும் முக்கியமானது. ஆதலால் ஒளிவு மறைவு இல்லாமல் சொல். உன் செயலைப் பற்றி உனக்குப் பெருமையாக இருக்கிறதா? அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறாயா? தேவைப்பட்டால் மீண்டும் அதனைச் செய்வாயா?

உய்கோ : முதலில் அதைச் செய்ததே நான்தானா? அவனைச் சுட்டது நான் இல்லை, அது தற்செயலாக நடந்தது. இரண்டு நிமிடங்கள் முன்னதாகவோ அல்லது இரண்டு நிமிடங்கள் கழித்தோ நான் கதவைத் திறந்திருந்தால், அவர்கள்

உய்கோ : எதரர், இதோ பார். நான் உன் கண்களை நிமிர்ந்து நோக்குகிறேன், இதோ குறிபார்க்கிறேன், என் கைகள் இப்போது நடுங்கவில்லை, உன் தலைக்குள் என்ன சிந்தனைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை.

எதரர் : ஏய்! இதோ பார், கொஞ்சம் பொறு, அவசரப்படாதே, முட்டாள்தனமாக ஒன்றும் செய்துவைக்காதே, அதுவும் ஒரு பெண்ணிற்காக!

(உய்கோ மூன்றுமுறைச் சுடுகிறான். ழெசிகா அலறுகிறாள். ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் உள்ளே பாய்ந்து வருகின்றனர்)

எதரர் : முட்டாள்! எல்லாவற்றைவும் கெடுத்துவிட்டாயே!

ஸ்லிக் : பேமானிப்பயலே! (தன் துப்பாக்கியை எடுக்கிறான்)

எதரர் : இவனுக்குத் தீங்கொன்றும் செய்துவிடாதீர்கள், (ஒரு நாற்காலியில் விழுகிறான்) பொறாமையினால் சுட்டு விட்டான்.

ஸ்லிக் : அப்படியென்றால்?

எதரர் : நான் இவளைக் கூடியிருந்தேன். (சற்று நேரத்துக்குப் பின்) சே! வெட்கக்கேடு!

(உயிர் துறக்கிறார்)

(திரை)



# அரங்கமைப்பு ஏழு

## ஒல்காவின் அறை

## காட்சி – 1

முதலில், இருட்டில் ஒல்கா, உய்கோவின் குரல்கள் மட்டும் கேட்கின்றன. சிறிதுசிறிதாக ஒளி அதிகமாகிக் கொண்டு வருகிறது.

ஒல்கா : அதுதான் உண்மையா? நீ அவனைச் சுட்டது நிஜமாகவே ழெசிகாவுக்காகத்தானா?

உய்கோ : நான் அவனைச் சுட்டுக்கொன்றதற்கு காரணம், நான் கதவைத் திறந்ததுதான். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அந்தக் கதவை நான் திறக்காமலே இருந்திருந்தால், ஒன்றும் நடந்திராது. கதவைத் திறந்தேன்; அவனை அங்கே கண்டேன். அவன் அணைப்பில் ழெசிகா. அவன் முகவாய்க்கட்டையில் உதட்டுச்சாயம். இது அற்பவிஷயமாக இருக்கலாம். நான் பல நாட்களாகச் சோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அந்தச் சோகத்திலிருந்து விடுபடுவதற் காகத்தான் நான் அவனைச் சுட்டேன்.

ஒல்கா : உனக்கு அவன்மேல் பொறாமையில்லை?

உய்கோ : பொறாமை? இருந்திருக்கலாம். ஆனால் அது ழெசிகாவின் பொருட்டன்று.

ஒல்கா : இதோ, என்னைப் பார். இப்போது நான் உன்னைக் கேட்கப் போகும் கேள்வி மிகவும் முக்கியமானது. ஆதலால் ஒளிவு மறைவு இல்லாமல் சொல். உன் செயலைப் பற்றி உனக்குப் பெருமையாக இருக்கிறதா? அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறாயா? தேவைப்பட்டால் மீண்டும் அதனைச் செய்வாயா?

உய்கோ : முதலில் அதைச் செய்ததே நான்தானா? அவனைச் சுட்டது நான் இல்லை, அது தற்செயலாக நடந்தது. இரண்டு நிமிடங்கள் முன்னதாகவோ அல்லது இரண்டு நிமிடங்கள் கழித்தோ நான் கதவைத் திறந்திருந்தால், அவர்கள்



ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக்கொண்டிருந்த நிலையில் பார்த்திருக்கவும் மாட்டேன், நான் சுட்டும் இருக்க மாட்டேன். (சிறிது நேரத்துக்குப் பின்) அவன் செய்ய முன்வந்த உதவியை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று உள்ளே நுழைந்தவன் நான்.

ஒல்கா : சரி.

உய்கோ : மூன்று குண்டுகள் சுடப்பட்டது தற்செயலாக நிகழ்ந்தது – தற்செயலாக நடந்த ஒரு விஷயத்தில், 'அப்படி நடந்திருந்தால்' 'இப்படி நடந்திருந்தால்' என அடுக்கிக் கொண்டே போகலாம்: ஆனால் "நான்", இந்த சூழ்நிலையில் "நான்" என்ன ஆவது? இது கொலைகாரன் யாரும் இல்லாத படுகொலை.

ஒல்கா : (ஆர்வமின்றி) அப்புறம்...

உய்கோ : இருப்பாய், ஒல்கா! கொலையையும் அதன் பின்னணியில் இருந்த காரணங்களையும் என்னால் பிரித்துப்பார்க்க இயலவில்லை.

ஒல்கா : இப்படி இருப்பதே மேல்...

உய்கோ : என்ன? இப்படி இருப்பதே மேல் என்றா சொல்கிறாய்? ஒல்கா, நீ தான் பேசுகிறாயா?

ஒல்கா : விளக்கமாக உனக்குச் சொல்கிறேன், ஆ... இப்போது மணி என்ன?

உய்கோ : (தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து) இரவு பன்னிரெண்டு மணி ஆவதற்கு இன்னும் இருபது நிமிஷங்கள் இருக்கின்றன.

ஒல்கா : சரி, இன்னும் நேரம் இருக்கிறது. நீ என்னிடம் என்ன சொன்னாய் இப்போது? உன் செயல் உனக்கே புரியவில்லை என்று சொன்னாய்.

உய்கோ : இல்லை, அளவுக்கு அதிகமாகவே புரிகிறது என்றுதான் நினைக்கிறேன். இது எந்தச் சாவியைப் போட்டாலும் திறக்கும்



பெட்டி மாதிரி. இதோ பார். அதாவது நான் அரசியல் வெறியினால்தான் கொன்றேன் என்றும் கதவைத் திறந்தவுடன் என்னுள்ளே ஏற்பட்ட ஆத்திரம் நான் அந்தக் கொலையைச் செய்வதற்கு உதவிய வெறும் உந்துதல்தான் என்றும் எனக்குச் சொல்ல வேண்டும்போல் தோன்றுகிறது என்று வைத்துக்கொள், அப்படியும் வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்!

ஒல்கா : (கவலையுடன் அவன் முக பாவத்தை ஆராய்ந்தவாறு) நீ அப்படி நம்புகிறாயா, உய்கோ? அவனை உயர்ந்த குறிக்கோள் களுக்காக கொன்றதாகவே நிஜமாகவே நீ நம்புகிறாயா?

உய்கோ : ஒல்கா, நான் எல்லாவற்றையும் நம்புகிறேன். நான் அவனைக் கொன்றதே நிஜம்தானா என்று என்னையே நான் கேட்டுக் கொள்ளும் நிலையில் இருக்கிறேன்!

ஒல்கா : கொன்றதே நிஜம்தானா என்றா?

உய்கோ : எல்லாமே ஒரு நாடகமாக இருந்தால்?

ஒல்கா : விசையை நிஜமாக அழுத்தினாய் அல்லவா?

உய்கோ : ஆமாம்... விரலை அசைத்தேன். அது நிஜம். மேடை நாடகங்களில் நடிகர்கள் கூடத்தான் விரலை அசைக்கிறார்கள். இதோ பார்... இப்படித்தான், ஆள் காட்டி விரலை அசைக்கிறேன் நான் உன்னைக் குறி பார்க்கிறேன், (வலக்கை ஆள்காட்டி விரலை மடக்கி, அவளைக் குறிபார்க்கிறான்) இதே செயல் தான். ஒருகால் நான்தான் அங்கு நிஜமில்லையோ என்னவோ? குண்டு மட்டும்தான் நிஜமா? நீ ஏன் இப்போது சிரிக்கிறாய்?

ஒல்கா : நீ பல பிரச்சினைகளை மிகவும் எளிதாக்கிவிட்டாய்!

உய்கோ : நான் அப்போது ஒரு பக்குவமில்லா இளைஞன். என் கழுத்தில் ஒரு கொலையைக் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது, ஒரு கல்லைத் தொங்க விட்டுக் கொள்வதைப் போல. அது சுமப்பதற்கு கனமாக இருக்குமோ என்று பயந்தேன். அது வீண் பயம். துளிக்கூடக்

கனமில்லை, மிகமிக இலேசாக இருக்கிறது. இது ஒரு சுமையே இல்லை. இதோ, என்னைப் பார், நான் வயது முதிர்ந்து விட்டேன். இரண்டு வருடம் சிறை வாசம்; ழெசிகாவிடமிருந்து பிரிந்துவிட்டேன். நம் தோழர்கள் அவர்களாக முன் வந்து என்னை விடுவிக்கும்வரை இத்தகைய திசையற்ற விந்தையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பேன். இவை எல்லாம் நான் செய்த கொலையினால் வந்தவைதானே? அப்படி இருந்தும் இது கனக்கவில்லை. இது எனக்குக் கழுத்திலோ, தோள்களிலோ, அல்லது உடலிலோ சுமையாகத் தெரியவில்லை. இது என் தலை விதியாகிவிட்டது. புரிகிறதா? ஆனாலும் நான் சுட்டேனே? கதவு திறக்கப்பட்டதே... ஒல்கா எனக்கு எதரரைப் பிடிக்கும்.. இவ்வுலகில் நான் வேறு யாரையும் நேசித்ததைவிட மிக அதிகமாகவே எதரரை நேசித்தேன். எனக்கு அவனைப் பார்க்கப் பிடிக்கும், அவன் பேசுவதைக் கேட்கப் பிடிக்கும். எனக்கு அவன் கைகள், அவன் முகம் எல்லாமே பிடிக்கும். நான் அவன் அருகில் இருக்கும்போது என் உள்ளப்புயல் அமைதியில் அடங்கும். இப்போது என்னைக் கொல்வது அவனது மறைவுதானே தவிர நான் செய்த கொலை அல்ல. (சிறிது நேரத்துக்குப் பின்) அவ்வளவுதான். பிறகு என்ன? எதுவுமே நடக்க வில்லை. ஆம் எதுவும் நடக்கவில்லைதான். பத்து நாள்கள் கிராமப் புறத்தில் கழித்தேன்; இரண்டு ஆண்டுகள் சிறையில். நான் மாறவில்லை. (சிறிது நேரத்துக்கு பின்) சரி! இப்போது என்ன முடிவு?

ஒல்கா : நீ கட்சியில் மீண்டும் அனுமதிக்கப்படுவாய்.

உய்கோ : சரி.

ஒல்கா : நடுநிசிக்கு லூயியும், ஷார்லும் உன்னைத் தீர்த்துக்கட்ட இங்கு வருவார்கள். ஆனால் நான் அவர்களுக்குக் கதவைத் திறக்கப் போவதில்லை, நீ மறு உபயோகத்துக்குப் பயன்படுவாய் என்று சொல்லிவிடப்போகிறேன்.

உய்கோ : ''மறு உபயோகம்!'' என்ன வேடிக்கையான வார்த்தை? இது குப்பைகூளங்களைப் பற்றிக் குறிப்பிடும் சொல் அல்லவா?



ஒல்கா : உனக்குச் சம்மதம்தானே?

உய்கோ : இல்லாமல் என்ன?

ஒல்கா : நாளை உனக்குப் புதிய பணி தரப்படும்.

உய்கோ : சரி.

ஒல்கா : அப்பாடா! (ஒரு நாற்காலியில் தொப்பென்று விழுகிறாள்)

உய்கோ : உனக்கு என்ன ஆயிற்று?

ஒல்கா : எனக்குச் சந்தோஷம்தான். (சற்றுநேரத்துக்குப் பின்) நீ மூன்று மணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தாயா. அந்த நேரம் முழுவதும் எனக்கு ஒரே பயமாக இருந்தது.

உய்கோ : எதைப் பற்றி பயம்?

ஒல்கா : நான் அவர்களிடம் என்ன சொல்ல வேண்டியிருக்குமோ என்று. இப்போது எல்லாம் சரியாகப் போய்விட்டது. நீ மீண்டும் எங்களுடன் சேர்ந்துவிடுவாய்.

உய்கோ : முன்போலவே நீ எனக்கு உதவி செய்வாயல்லவா?

ஒல்கா : ஆம். உதவி செய்வேன், உய்கோ!

உய்கோ : எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது, ஒல்கா! நீ எப்போதும் போல் அப்படியே இருக்கிறாய். அதே தூய்மை. அதே தெளிவு, எனக்குத் தூய்மையைக் கற்றுத் தந்ததே நீதான்.

ஒல்கா : நான் தினம்தினம் உன்னையே நினைத்துக் கொண்டிருப்பேன்.

உய்கோ : ஒல்கா, ஒரு விஷயம். . .

ஒல்கா : என்னது?

உய்கோ : பார்ஸல்களை அனுப்பியது நீதானே?

ஒல்கா : எந்தப் பார்ஸல்?

உய்கோ : சாக்கலேட்டுப் பார்ஸல்கள்?

ஒல்கா : இல்லை, நான் இல்லை. ஆனால் அவர்கள் அனுப்பப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

உய்கோ : தெரிந்தும், அனுப்பட்டும் என்று இருந்துவிட்டாயா?

ஒல்கா : ஆமாம்.



உய்கோ : உன் உள்ளத்தில் என்ன நினைவுகள்?

ஒல்கா : (தன் கூந்தலைக் காட்டி) இதோ பார்.

உய்கோ : என்ன நரைமுடியா?

ஒல்கா : இவை ஒரே இரவில் வந்துவிட்டன. நீ இனி என்னை விட்டுப்போகமாட்டாய். ஏதாவது வன்முறை என்று வந்தால் நாம் இருவருமாக அதைச் சமாளிப்போம்.

உய்கோ : (புன்னகையுடன்) உனக்கு நினைவிருக்கிறதா, ரஸ்கோல் நிக்கோஃப்?

ஒல்கா : (திடுக்கிட்டு) ரஸ்கோல் நிக்கோஃபா?

உய்கோ : அதுதான், நான் தலைமறைவாக இருப்பதற்கு நீ தேர்ந்தெடுத்த பெயர். என்ன, ஒல்கா! இது நினைவில்லையா?

ஒல்கா : ம்... நினைவிருக்கிறது.

உய்கோ : மீண்டும் அந்தப் பெயருக்குள்ளே புகுந்துவிடப் போகிறேன்.

ஒல்கா : இல்லை. வேண்டாம்.

உய்கோ : ஏன்? எனக்கு அது மிகவும் பிடித்த பெயர். கையுறையைப் போல எனக்கு அது பொருந்தியிருக்கிறது என்று நீ சொல்வாயே!

ஒல்கா : அந்தப் பெயர் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

உய்கோ : எல்லோருக்குமா? யார் யாருக்கு?

ஒல்கா : (திடீரென்று ஒருவித அலுப்புடன்) இப்போது மணி என்ன?

உய்கோ : இன்னும் ஐந்து நிமிடம் இருக்கிறது.

ஒல்கா : உய்கோ, நான் சொல்லப்போவதைக் கேட்டுக்கொள். இடைமறிக்காதே. உன்னிடம் சொல்ல வேண்டியது இன்னும் பாக்கி இருக்கிறது; மிகக் கொஞ்சம்தான். முக்கியப்பட்டது ஒன்றுமில்லை. இருந்தாலும், முதலில் உனக்குக் கொஞ்சம் ஆச்சர்யமாக இருக்கும். ஆனால் போகப்போகப் புரிந்து கொள்வாய்.

உய்கோ : என்னது?



ஒல்கா : நீ செய்த... வந்து... நீ செய்த செயலைபற்றி ஒன்று சொன்னாயே, அதுபற்றி எனக்கு மிக்க சந்தோஷம். நீ செய்ததைப்பற்றி உனக்குப் பெருமையோ, அல்லது மன நிறைவோ இருந்தால் இப்போது நிலைமை உனக்கு இன்னும் கடினமாக இருந்திருக்கும்.

உய்கோ : கடினமாகவா! எதற்குக் கடினமாக?

ஒல்கா : அதை மறப்பதற்குக் கடினமாக.

உய்கோ : மறப்பதற்கா? ஏன் மறக்க வேண்டும், ஒல்கா?

ஒல்கா : உய்கோ, நீ அதை மறந்தே ஆகவேண்டும். நான் உன்னிடம் அப்படி ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லை. நீயாகவேதான் சொன்னாயே: ''நான் என்ன செய்தேன்? எதற்காகச் செய்தேன்? என்று எனக்கே தெரியவில்லை'' என்று. ''எதரரைக் கொன்றேனா என்றுகூட நிச்சயமாகத் தெரியவில்லை'' என்று சொன்னாயே. அதுதான் சரியான அணுகுமுறை. அதே வழியில் கொஞ்சம் தொடர்ந்து செல்லவேண்டும். அவ்வளவு தான். இந்தச் சம்பவத்தை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடு. மீண்டும் இதைப்பற்றிப் பேசவே பேசாதே– என்னிடமும் கூடத்தான். எதரரைக் கொன்றவன் இறந்து விட்டான். அவன் பெயர்தான் ரஸ்கோல் நிக்கோஃப். அவன் விஷச்சாக்கலேட்டுகளால் கொல்லப்பட்டுவிட்டான். (அவள் அவன் சிகையை வருடியவாறே) நான் உனக்கு வேறு ஒரு பெயர் தேர்ந்தெடுக்கிறேன்.

உய்கோ : என்ன நடந்தது, ஒல்கா? நீ என்ன செய்துவிட்டாய்?

ஒல்கா : கட்சி மேலிடம் தன் கொள்கையை மாற்றிக்கொண்டுவிட்டது. (உய்கோ அவளை உன்னிப்பாக கூர்ந்து கவனிக்கிறான்) என்னை அப்படிப் பார்க்காதே, புரிந்து கொள்ள முயற்சி செய். நாங்கள் உன்னை எதரரைக் கொல்ல அனுப்பியபோது, ருஷ்யாவுடன் நமது தொடர்புகள் விட்டுப்போயிருந்தன. நமது போக்கை நாமாகவே தனியாகத் தீர்மானிக்க வேண்டிய நிலை. என்னை அப்படிப் பார்க்காதே, உய்கோ. என்னை அப்படிப் பார்க்காதே!

உய்கோ : பிறகு?

ஒல்கா : இப்போது ருஷ்யாவுடன் தொடர்புகள் மீண்டும் ஏற்பட்டு விட்டன. சென்ற பனிக்காலத்தில் இராணுவ நடவடிக்கைக் காரணங்களை மட்டுமே முன்னிட்டு நாம் இடைக்கால அரசரின் பக்கம் நெருங்க வேண்டும் என்று தான் விரும்புவதாக ருஷ்யா நமக்குத் தெரியப்படுத்தியது.

உய்கோ : நீங்களும் அப்படியே கீழ்ப்படிந்தீர்களா?

ஒல்கா : ஆம். அரசாங்கத் தரப்பிலிருந்தும் பெண்டகான் அமைப்பின் தரப்பிலிருந்தும் சில ஆட்களைச் சேர்த்துக் கொண்டு 6 உறுப்பினர் கொண்ட தலைமறைவுக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம்.

உய்கோ : ஆறு உறுப்பினர்களா? அதில் உங்களுக்கு மூன்று உறுப்பினர்களா?

ஒல்கா : ஆமாம். உனக்கு எப்படித் தெரியும்?

உய்கோ : ஒரு யூகம். மேலே சொல்.

ஒல்கா : அந்த நிகழ்வுக்குப் பிறகு அரசுப்படைகள் போர் நடவடிக்கைகளில் கொஞ்சம்கூட ஈடுபடவில்லை என்றே சொல்லலாம். அனேகமாக ஒரு லட்சம் மனித உயிர்கள் அழியாமல் காப்பாற்றிவிட்டோம். ஆனால் உடனே ஜெர்மானியர்கள் நாட்டை ஆக்கிரமித்து விட்டார்கள்.

உய்கோ : மிகவும் சரி. ருஷ்யர்கள் அதிகாரத்தை நம் தொழிலாளர் கட்சியின் கையில் ஏகபோகமாக அளித்துவிட விரும்பவில்லை என்று உங்களுக்குத் தெரியப்படுத்தி இருப்பார்கள் என்று நம்புகிறேன். மேலும் அப்படிச் செய்தால் கூட்டுநாடுகளுடன் பிரச்சினைகள் எழக்கூடும் என்றும், அதுவன்றி மேலும் நீங்கள் உள்நாட்டுக் கலவரங்களால் தூக்கியெறியப்படுவீர்கள் என்றும் தெரிவித்துவிட்டார்கள் அல்லவா?

ஒல்கா : எப்படி...?

உய்கோ : இவையெல்லாம் நான் முன்பே ஒருமுறை கேட்டவை போல் இருக்கின்றன. சரி எதரர் விஷயம்?



ஒல்கா : அவன் முயற்சிகள் உரிய காலம்வரும் முன்னர் அவசரப்பட்டு முன்கூட்டி எடுக்கப்பட்டவை. இத்தகைய கொள்கையினைச் செயல்படுத்த அவன் தக்க ஆசாமி இல்லை.

உய்கோ : ஆகையினால் அவனைக் கொன்றுவிட வேண்டும். வெட்ட வெளிச்சமாகப் புரிகிறது. பிறகு அவனுடைய நினைவுக்கு அஞ்சலி செலுத்தி மறுவாழ்வு அளித்திருப்பீர்களே?

ஒல்கா : அது செய்ய வேண்டியதுதானே!

உய்கோ : போர் முடிந்தபின் அவனுக்குச் சிலை வைக்கப்படும், எல்லா ஊர்களிலும் ஒரு தெருவிற்கு அவன் பெயர் சூட்டப்படும், வரலாற்றுப் புத்தகத்தில் அவன் பெயர் பொறிக்கப்படும். அவன் சார்பாக நான் சந்தோஷப்படுகிறேன். சரி அவனைக் கொன்றவன்? அவன் ஒரு ஜெர்மானியர்களின் கைக்கூலி என்று சொல்லிவிட வேண்டியதா?

ஒல்கா : உய்கோ!

உய்கோ : நான் கேட்டதற்குப் பதில் சொல்.

ஒல்கா : நீ நம் கோஷ்டியைச் சேர்ந்தவன் என்பது நம் தோழர்களுக்குத் தெரியும். இது காதல் காரணங்களுக்காக நடந்த கொலை என்று அவர்கள் என்றுமே நம்பியதில்லை. அதனால் அவர்களுக்கு ஏதோ விளக்கம் அளிக்கப்பட்டது... ஓரளவுக்கு முடிந்தவரை.

உய்கோ : நம் தோழர்களிடமே பொய் சொல்லியிருக்கிறீர்கள்?

ஒல்கா : பொய் சொன்னோம் என்று... சொல்லமுடியாது... உய்கோ, இப்போது போர்க்காலம்! படைகளிடம் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட முடியுமா?

(உய்கோ வாய்விட்டுச் சிரிக்கிறான்)

ஒல்கா : உய்கோ, உனக்கு என்ன ஆயிற்று... உய்கோ!

(கண்களில் நீர் மல்கும்வரை சிரித்துச் சிரித்து உய்கோ ஒரு நாற்காலியில் விழுகிறான்.)



உய்கோ : எல்லாமே அவன்சொன்னது – அப்படியே கொஞ்சமும் மாற்ற மின்றி அவன் சொன்னதேதான்! இது ஒரு கோமாளிக் கூத்து.

ஒல்கா : உய்கோ!

உய்கோ : சற்றுப் பொறு, ஒல்கா, நான் சிரித்துமுடிக்கும்வரை. இவ்வளவு மனம்விட்டுச் சிரித்துப் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. இது எல்லோருக்கும் இக்கட்டை விளைவிக்கும் ஒரு படுகொலை. யாருக்கும் இது வேண்டாம். ஏன் செய்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. இதை எப்படிச் சமாளிப்பது என்று உங்களுக்குத் தெரியவில்லை. (அவன் அவளை உற்று நோக்குகிறான்) நீங்கள் எல்லோருமே ஒரே ரகம்தான்!

ஒல்கா : உய்கோ, நான் உன்னைக் கேட்டுக்கொள்வதெல்லாம்...

உய்கோ : என்ன ஒற்றுமை! எதரர், லூயி, நீ, நீங்கள் எல்லோரும் ஒரே ரகம்; உயர்ந்த ரகம்; இரும்புபோல் திடமானவர்கள்; உலகை வெற்றிகாணப் பிறந்த மாவீரர்கள்; தலைவர்கள்! நான் ஒருவன்தான் இதில் விலாசம் தவறிவந்து அகப்பட்டுக் கொண்டவன்.

ஒல்கா : உய்கோ, உனக்கு எதரரைப் பிடித்திருந்ததே?

உய்கோ : இந்த நிமிடத்தில் அவனை எனக்குப் பிடித்திருப்பதுபோல் என்றுமே இருந்ததில்லை.

ஒல்கா : அப்படியென்றால், அவன் தொடங்கிவைத்த பணியை நிறை வேற்ற நீ எங்களுக்கு உதவவேண்டும்.

(அவன் அவளை நோக்குகிறான். அவள் சற்றுப் பின்னே நகர்கிறாள்)

உய்கோ : (மெதுவாக) பயப்படாதே, ஒல்கா! நான் உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன். ஆனால் ஒரு நிமிடம் நீ ஒன்றும் பேசாதே. ஒரேஒரு நிமிடம்தான். என் சிந்தனைகளை ஒருமுகப் படுத்திக்கொள்ளும்வரை–சரியா? அதாவது உங்கள் திட்டப்படி நான் மீண்டும் பயன்படக்கூடியவன். மிகவும் சரி. ஆனால்



நான் மட்டும் தனியாக, எல்லாப் பின்னணியையும் விலக்கிய நிலையில், முழுநிர்வாணமாக, என் சுயநிறத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் நிபந்தனை. தன் கடந்த கால வாழ்க்கை முழுவதும் மறந்துபோன மனநோயாளி போல் நான் ஆகிவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். படுகொலை! அது மறு உபயோகத்துக்குப் பயன்படாதே. ம்...! அது ஒரு சின்ன தவறு. அவ்வளவுதான். அது ஒன்றும் முக்கியமில்லை. அதை அப்படியே விட்டுவிட வேண்டியது. குப்பைத் தொட்டியிலேயே கிடக்கட்டுமே. ஆனால் நான் நாளைக்கே என் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டியது. பெண்டகான் அமைப்பின் தோழர்களுடன் இணைந்து கைகோத்துக்கொண்டு பணியாற்ற வேண்டியது.

ஒல்கா : நான் வந்து...

உய்கோ : உஷ்... வாயை மூடு, ஒல்கா! தயவு செய்து ஒன்றும் பேசாதே. (சற்றே யோசித்து விட்டு) முடியாது.

ஒல்கா : என்ன முடியாது?

உய்கோ : முடியாது. நான் உங்களோடு சேர்ந்து பணியாற்ற முடியாது.

ஒல்கா : உய்கோ, உனக்கு நிலைமை புரியவில்லை? இதோ அவர்கள் வரப் போகிறார்கள், கையில் துப்பாக்கியுடன்.

உய்கோ : தெரியும் கொஞ்சம் தாமதமாகி விட்டது என்று கூடச் சொல்லலாம்.

ஒல்கா : நாய் ஒன்று அடித்துக் கொல்லப்படுவது போல நீ சாக வேண்டுமா? எவ்விதக் குறிக்கோளும் இல்லாத ஒரு சாவு உனக்குச் சம்மதமா, உய்கோ? நாங்கள் உன் மேல் நம்பிக்கை வைப்போம். இனி என்றென்றும் எங்களுக்கு உற்ற தோழனாக நீ இருக்கலாம். உன் செயல்திறனை ஏற்கனவே நீ நிரூபித்தும் விட்டாய்... (ஒரு கார் இன்ஜின் ஒலி கேட்கிறது).

உய்கோ : அவர்கள் தாம்.

ஒல்கா : இது கொடுமையிலும் கொடுமை! நம் கட்சி...

உய்கோ : பெரிய பெரிய வார்த்தைகள் எதுவும் தேவையில்லை, ஒல்கா!. இந்த விவகாரத்தில் முன்னமேயே ஏகப்பட்ட வார்த்தை ஜோடனைகள்! அவை நிறையத் தீங்கும் விளைவித்து விட்டன. (கார் போகிறது). இது அவர்கள் கார் இல்லை. இருக்கிற நேரத்தில் உனக்கு விளக்கமாக சொல்லி விடுகிறேன், கேள்: எதரரை நான் ஏன் கொன்றேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எந்தக் காரணங்களுக்காக நான் அவனைக் கொல்ல அனுப்பப்பட்டேன் என்று தெரியும். 'அவன் மோசமான அரசியல் நடத்தினான்; தன் தோழர்களிடமே பொய் சொன்னான்; கட்சியையே கெடுத்துவிடும் அளவுக்கு கொண்டு வந்து விட்டான்' என்பனவெல்லாம்தான் சொல்லப் பட்ட காரணங்கள். அலுவலக அறையில் நானும் அவனும் தனியாக இருந்தபோது அவனைச் சுடும் தைரியம் எனக்கிருந்திருந்தால் இவையெல்லாம் அவன் மரணத்திற்குக் காரணமாக இருந்திருக்கும். நானும் என்னை நினைத்து வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை வந்திருக்காது. இப்போது இன்னும் ஒரு படி மேலே போய் 'எவ்விதக் காரணமும் இன்றி அவனை நான் சுட்டேன்' என்று ஒத்துக்கொள்ள வேண்டும் என்கிறீர்கள். இதனால் நான் மேலும் வெட்கத்தால் தலைகுனிய வேண்டும் என்கிறீர்கள். ஒல்கா, எதரரின் அரசியல் அணுகுமுறை பற்றி நான் என்ன நினைத்தேனோ அதில் இப்போதும் எந்த மாற்றமும் இல்லை. நான் சிறையில் இருந்தபோது என் கருத்தையேதான் நீயும் கொண்டிருப்பாய் என்று நினைத்தேன். அதுவே எனக்கு ஒரு பலத்தையும் தந்தது. ஆனால் இப்போது நான் ஒருவன் மட்டும்தான் அக்கருத்துடன் இருக்கிறேன் என்று தெரிந்து விட்டது. இருப்பினும் நான் என் கருத்தை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. (கார் என்ஜின் சத்தம்).

ஒல்கா : இந்த தடவை நிச்சயமாக அவர்கள் காரேதான். என்னால் ஒன்றும்... இந்த துப்பாக்கியை எடுத்துக் கொள். என் அறைக் கதவைத் திறந்து கொண்டு தப்பி ஓடிவிட முயற்சி செய்.



உய்கோ : (துப்பாக்கியை எடுக்காமல்) எதரரை ஒரு மாமனிதராக ஆக்கிவிட்டீர்கள். ஆனால் அவனை நான் நேசித்த அளவுக்கு உங்களால் ஒரு நாளும் நேசிக்கமுடியாது. நான் செய்த செயலுக்குப் பொறுப்பேற்காமல் என் நிலையை மாற்றிக் கொண்டுவிட்டால் அவன் ஓர் அனாமதேயப் பிணமாக, கட்சியின் வேண்டாத கழிவுப் பொருளாகிவிடுவான்; (கார் வாயிலில் நிற்கிறது) தற்செயலாகக் கொல்லப்பட்டவனாக, ஒரு பெண் விவகாரத்தில் கொல்லப்பட்டவனாகி விடுவான்.

ஒல்கா : ஓடிப்போய்விடு.

உய்கோ : எதரரைப் போன்ற ஒரு மனிதன் தற்செயலாகச் சாவதில்லை. தம் அரசியலுக்காகத்தான் சாக முடியும். அவன் மரணம் அவனாகவே தேடிக் கொண்டதாகத்தான் இருக்கும். என் செயலுக்கு மக்கள் முன்னிலையில் நான் பொறுப்பேற்றுக் கொண்டு, ரஸ்கோல் நிக்கோஃப் தான் அதைச் செய்தவன் என்பதை நிலைநாட்டி அதற்குண்டான தண்டனையையும் ஏற்றுக் கொண்டால் தான் அவனுக்குரிய மரணம் கிட்டும்.

(கதவு தட்டப்படுகிறது)

ஒல்கா : உய்கோ ... நான்...

உய்கோ : (கதவை நோக்கிச் செல்கிறான்) ஒல்கா, நான் இன்னும் எதரரைக் கொல்லவில்லை. இப்போதுதான் நிஜமாக அவரைக் கொல்லப் போகிறேன், அவருடன் என்னையும் சேர்த்து.

(கதவு மீண்டும் தட்டப்படுகிறது)

ஒல்கா : (அலறுகிறாள்) திரும்பிப் போய் விடுங்கள், திரும்பிப் போய் விடுங்கள்.

(உய்கோ தன் காலால் உதைத்துக் கதவைத் திறக்கிறான்)

உய்கோ : (உரத்த குரலில்) மறு உபயோகத்துக்கு லாயக்கில்லை.

(திரை)